14வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 · 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை · மாதமிருமுறை · இலவசம்

வாசித்துவிட்டீர்களா?

உலக தமிழோசை

7வது இதழ்
சிறப்பு விலை

**$1.50**

மட்டுமே

வீடு விற்க, வாங்க...

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
**Direct: 416.315.9397**
OFFICE: 416.321.6969

Sales Agents Welcome

நதி 14 · JUNE 15, 2004 · பாலம் 12



03 இந்தியாவின் ஆபிரகாம் லிங்கன் மன் மோகன் சிங்



09 திசை மாறிப் போன தமிழ் சினிமா



04 விவாகரத்து மின்னல் வேகம் காட்டுகிறார்களா கனடா தமிழர்கள்?

ஆகஸ்ட் 14, 04 சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா




## பத்திரிகையாளர் கொலையை (IFJ) கண்டிக்கிறது.

பத்திரிகையாளர் நடேசன் கொலையை International Federation of Journalists (IFJ) கண்டிக்கின்றது.

செய்தித்துறையில் பெரும் பங்காற்றிய இலங்கைப் பத்திரிகையாளர் ஐ. நடேசனின் கொலையை International Federation of Journalists கடுமையாக கண்டித்துள்ளது. அத்தோடு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கடிதம் ஒன்றையும் இவ் அமைப்பின் செயலாளர் நாயகம் அனுப்பிவைத்துள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பத்திரிகைச் சுதந்திரம் எந்தளவுக்கு இருக்கின்றது என்பது ஒரு நாட்டின் ஜனநாயகத்தை அளவிடுவதற்கான அளவு கோலாக இருக்கும். பத்திரிகை சுதந்திரம் என்பது பத்திரிகையை வெளியிடுகின்ற சுதந்திரம் மட்டுமல்ல, செய்திகளையும், ஆக்கங்களையும் எழுதுகின்ற பத்திரிகையாளருக்கு

தொடர்ச்சி 19ம் பக்கம்

# இலங்கையில் இரத்தக் களரி ஓடும்

## புலிகள் கடும் சீற்றம்



இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கடும் சீற்றம் அடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

புலிகளின் செயலகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே புலிகளின் கடும் சீற்றம் வெளிப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் தமிழ் தேசிய கூட்டமைப்பு பா.உ.க்களை வலிந்து தானே தேனீர் விருந்துக்கு அழைத்த சந்திரிகா, 'தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்க தான் தயார்' என்று தெரிவித்திருந்தார்.

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

**416-264-3232**

3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

Singapore Communication
Since 1991

$40.00/ Month
- Up to 700 Min Free
- Evenings & Weekends Free
- 2 Year contract
- ••• Offer Ends June 30. 04 •••

Family plan $40.00/ M/2 phones
- 100 Min Daytime to share /Weekend Free
- Upgradable for Free Evening with more Min 2500 Min Free
- between 2 phones V/M, C/W, C/C Free
- Buy one phone as low as $49.99 & 2nd Free
- ••• 2 year contract

More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...


ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# ஏமாற்றுதல்களை வெற்றிகரமாகக் கையாள



"ஃபிராட்" (Fraud) ஐ தமிழில் என்ன வார்த்தை கொண்டு அழைப்பது? இதுதான் என்னுடைய இப்போதைய பிரச்சினை. "ஏமாற்றுதல்" என்று சொல்லலாமா? ஆங்கிலத்தில் "ஃபிராட் ரிஸ்க்" என்பதைத் தமிழில் "எதிர்பார ஏமாற்றும் ஆபத்து" என்று மொழி பெயர்க்கின்றேன். ஏன் இத்தகைய எதிர்பாரா ஏமாற்றும் ஆபத்துக்கள் நடக்கின்றன? அதைத் தெரிவிப்பதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம். இக்கட்டுரை, இந்த இதழிலும், இனிவரும் இரண்டு இதழ்களிலும் தொடரும்.

ஏன் நடக்கின்றது என்பதைத் தெரிந்து கொண்டால், உங்களால் தொழிலில் எதிர்பாரா ஏமாற்றம் ஆபத்துக்களினால் வரும் நட்டத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இல்லையா?

கனடாவில் நடத்தப்பட்ட சர்வே (survey) ஒன்றின்படி கடந்த 24 மாதங்களில் இந்த ஏமாற்றுதல்களுக்கு காரணமாயிருந்தவர்கள்
பணியாளர்கள் 60%
நிர்வாகம் 16%
வெளியார் 24%

ஃபிராட் அல்லது ஏமாற்றுதல் கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்கக் காண்கிறோம்.

- திருட்டு
- உண்மைக்குப் புறம்பாக நடத்தல்
- பொய்க் கணக்கு
- லஞ்சம் முதலியன

ஏமாற்றுதல்களை வெற்றிகரமாகக் கையாள சில பொதுவான விடயங்களைச் சென்ற இதழில் பார்த்தோம். ஃபிரட்டைத்தான் (Fraud) நாம் தமிழில் ஏமாற்றுதல் என்று மொழி பெயர்த்தியிருக்கிறோம். இந்தக் கட்டுரையில் ஏமாற்றுப் பேர்வழிகள் பற்றிய சில பொதுவான தகவல்களைப் பார்ப்போம். அடுத்த கட்டுரையில் ஃபிராட் செய்யும் பணியாளர்கள் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.

இருபது சதவீதத்தினர் எந்த சூழ்நிலையிலும் யாரையும் ஏமாற்று வதில்லை. இன்னும் ஓர் இருபது சதவீதத்தி னர் மாட்டிக் கொள்ள மாட்டோம் என்று தெரிந்தால் நிச்சயம் மற்றவர்களை ஏமாற்றுவார்கள். அறுபது சதவீதத்தினர் தங்களை நேர்மை யானவர்கள் என்று கருதுகின்றனர். ஆனால் இந்தப் பெரும்பான்மையோர், சந்தர்ப்பம் கிடைக்கும் போது சிறுசிறு தவறுகள் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

மக்கள் ஏன் மற்றவர்களை ஏமாற்றுகிறார்கள்? தவறு செய்பவரின் கோணத்திலிருந்து முதலில் பார்ப்போம்.

- அவர் எனக்கு இழைத்த தீங்குக்கு, இந்தக் கெடுதல் தேவையே என்று செய்யும் தவறை நியாயப்படுத்தும் மனப்பான்மை.
- ஏமாற்றக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள்.
- ஏமாற்றுபவரின் தொழில் நுட்பத்திறமை.
- குற்றத்தை மற்றவர்கள் எவ்வளவு தூரம் கண்டு பிடிக்க முடியும் என்று குற்றம் இழைப்பவர் அளவிடும் தன்மை ஆகியன.

சிலர் திட்டமிட்டே ஏமாற்றுகிறார்கள். சிலர் நேர்மையாளர்களாக வாழ்க்கையை ஆரம்பித்து வாழ்வின் கடினமான கட்டங்களில் சிலபல குற்றங்களைச் செய்கிறார்கள். கடன் தொல்லை போன்று பெரும் சிக்கல்களில் மாட்டித் தவிப்போர் வேறு வழியின்றி குற்றம் புரியத் தலைப்படுகின்றனர்.

ஃபிராட் செய்பவர்கள்

- பணியாளர்களாக இருக்கலாம்.
- வெளியாட்களாக இருக்கலாம்.
- அல்லது இரண்டின் கூட்டாகவும் இருக்கலாம்.

தவறுகள் ஒரே நாளில் நடப்பதில்லை. அதற்கான அறிகுறிகள் பலமுறை பல வழிகளில் முன்னதாகவே வெளிப்படுகின்றன.

இந்த அறிகுறிகள்:

- நிர்வாகம் சம்மந்தப்பட்டதாகவும் இருக்கலாம்.
- பணியாளர்கள் சம்மபந்தப்பட்டதாகவும் இருக்கலாம்.
- இவை இரண்டுக்கும் அப்பாற்பட்டதாகவும் இருக்கலாம்.

அவற்றில் சிலவற்றை இப்போது பார்ப்போம்.

நிர்வாகம் சம்மந்தப்பட்டவை.

- தகுந்த, போதுமான கட்டுப்பாடுகள் இல்லாமை.
- நிர்வாகத் திறமை, நிதியத்திறமை இல்லாமை.
- சட்டத்தை மீறிய அல்லது மதிக்காத பல தொடர் நடவடிக்கைகள்.

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

**கடன் தொல்லை போன்று பெரும் சிக்கல்களில் மாட்டித் தவிப்போர் வேறு வழியின்றி குற்றம் புரியத் தலைப் படுகின்றனர்.**

- தெளிவான நோக்கு, குறிக்கோள் இல்லாமை.
- தொலை நோக்குப் பார்வை இல்லாமை.

## பெரி. முத்துராமன்

பணியாளர்கள் சம்மந்தப்பட்டவை.

- தகுந்த பயிற்ச்சி இன்மை.
- தகுந்த மேற்பார்வை இன்மை.
- தகுந்த கட்டுப்பாடுகள் இன்மை.
- பாதிக்கப்பட்ட பணியாளர்கள்.
- குறைந்த சம்பளம்.
- ஆள் குறைப்புப் பற்றிய பயம்.
- பணியாளர்களுக் கிடையே நிலவும் உற முறை.

மற்றவை.

- விற்பனையை மிகவும் அதிகரிக்கத் தூண் நிர்வாகத்தால் கொடுக்கப்படும் அழுத்தமு கமிஷன் முறையிலான சம்பள முறையும்.
- சந்தையில் நிலவும் கடுமையான போட்டி.
- குறைந்து வரும் விற்பனை, லாப முதலியன.

ஃபிராட் நடக்கிறது அல்லது நடக்க போகின்றது என்பதை அறிவிக்கும் சி குறிப்புகள்:

- பெயர் இல்லாத கடிதம்.
- அநாமதேய தொலைபேசிச் செய்தி.
- வருமானத்தோடு சம்மந்தமில்லா வாழ்க்கைமுறை.
- வழக்கத்துக்கு மாறான நடவடிக்கைகள்.
- மாற்றப்பட்ட, அழித்தல், திருத்த போன்றவை நிறைந்த ஆவணங்கள்.
- சரியான முறையில் கையெழுத்திடப்படா கடிதங்கள், உத்தரவுகள், உதாரணம். ரப் ஸ்டாம்பு கையெழுத்து.
- திரும்பி வராத சம்மதக் கடிதங்க போன்றவை.
- விளக்கப்படாத ஏற்ற இறக்கங்கள்.
- தேவைக்கதிகமான கொள்முதல்.
- தகுந்த அனுமதியின்றி ஆரம்பிக்கப்ப நடவடிக்கைகள்.

பணிபுரியும் இடத்தில் பல குற்றங்க சம்மந்தப்படாத மற்றவர்களாலேயே வெளி கொணரப்பட்டிருக்கின்றது. ஆய்வு அல்ல தணிக்கை மூலம் கண்டு பிடிக்கப்பட்ட விட, சகபணியாளர்களின் ஒத்துழைப்பினா கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்களே அதிகம உள்ளன. எனவே நிர்வாகம், பணியாளர்க தைரியமாகப் பேசக் கூடிய சூழ்நிலையையு நேர்மையாளர்களை வரவேற்று ஆதரிக்கு சூழ்நிலையும் உருவாக்க வேண்டும்.



அடுத்த இதழில் பணிபுரிபவர்க செய்யக்கூடிய ஏமாற்றுதல்களைப் பார்போம். இதற்கிடையில் உங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு மேல் விவரங்களுக்கும் பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி 416-430-0623.
மின்அஞ்சல்: perrii@successbizsolaiton.co

●●●

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

விளம்பரம்
VLAMBARAM
விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca

நாளையை இன்றே தொடுவோம்

• Auto • Home • Life • Health • Travel
Award Insurance Brokers Inc.
• Are you a new driver?
• Have you been refused Auto Insurance? Are you a new homeowner on the lookout for a Home Insurance?
• Do you want to preserve your retirement savings even if Critical Illness affects you?
• Are you looking for low premium life Insurance from reputed insurance companies?
• Are you in search of quality information o insurance and investments?
If you answer, 'YES' to any of these questions ca today.
பெரி. முத்துராமன், MBA, M.COM., PFPC
Insurance Broker
Award Insurance Brokers inc.
Tel. 416-430-0623 Cell. 416-278-2026

# இந்தியாவின் ஆபிரகாம்லிங்கன் மன்மோகன் சிங்

*வினைத்திட்டம் என்பது ஒருவர் மனத்திட்டம்*
*மற்றைய எல்லாம் பிற* (குறள்)

ஒருவனது மனத்தில் மட்டுமே உறுதியாயிருந்தால் காணும் அவனின் செயலில் உறுதி வந்துவிடும். வேறு ஒன்றும் அவனுக்கு தேவையில்லை என்பது இதன் பொருள். இது யாருக்கு பொருந்துகிறதோ இல்லையோ தெருவிளக்கு வெளிச்சத்தில் இருந்து பாடம் படித்து நாட்டின் தலைவராக வந்த இந்த இருவருக்கு மிகவும் பொருந்தும். ஒருவர் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன், மற்றையவர் இந்தியா வின் புதிய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்.

பொருளாதாரத்தில் மிளிரும் இப்போதைய இந்தியாவை விடுங்கள், அதாவது கடந்த காலாண்டு பொருளாதார வளர்ச்சி 10.4 வீதம் ஆகவும், தனது மத்தியவங்கியின் வெளிநாட்டு நாணயசேமிப்பை 11,800 கோடி அமெரிக்க டொலர்களாகவும் வைத்திருக்கும் இன்றைய இந்தியாவை விடுங்கள். 1991 இல் இதற்கு எதிர்மாறாக இருந்த இந்தியாவை சற்றுப்பாருங்கள். அப்போது இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சி 8.5 ஆக இருந்தது. அப்போது அதனிடம் இருந்த வெளிநாட்டு நாணய சேமிப்பு 100 கோடி அமெரிக்க டொலர்கள் கூட இல்லை. 100 கோடி அமெரிக்க டொலர்கள் இரண்டு கிழமைக்குரிய இந்தியாவின் இறக்குமதிக்கே போதாது. அமெரிக்கா உட்பட வெளிநாடுகள் எல்லாம் இந்தியா Bankruptcy அடையப் போகுது என எதிர்பார்த்திருந்தனர்.

இத்தருணத்தில் வெளியுலகுக்கு சற்றுமே தெரிந்திராத ஒக்ஸ்வோட் பல்கலைக்கழக கலாநிதி மன்மோகன்சிங்கை அப்போதைய பிரதமர் பி.வி நரசிம்மராவ் நிதி அமைச்சராக்கினார். அப்போது சிங் அரசியலில் இருக்கவில்லை. அவர் மக்களால் தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதியும் அல்ல. சிங் பொருளாதார துறையில் ஒக்ஸ்வோட் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றிருந்தார். அதைவிட இந்திய மத்திய வங்கியின் சேமிப்பு பிரிவின் தலைவராக 1982இல் இருந்து 1985 வரையும் பணியாற்றி இருந்தார்.

நிதியமைச்சர் பதவியை தர பி.வி நரசிம்மராவ் கூப்பிட்டபோது தன்னால் நம்பமுடியவில்லை என சிங் பின்னர் கூறியிருந்தார். அப்போது அவரின் நண்பர்கள் "உன்னைப் பலிக்கடா ஆக்கவே அவர்கள் உனக்கு நிதி அமைச்சர் பதவி தருகிறார்கள். நீ ஆறு மாதத்தில் தலைகுனிவு ஏற்பட்டு வெளியேற்றப்பட போகிறாய்" என்றார்கள்.


அதற்கு அவர் சொன்னது. "எனக்கு அரசியலில் ஒரு சந்தர்ப்பம் தரப்படுகிறது. இப்படியான இக்கட்டான நிலையில் உள்ள இந்திய நிதிநிலைமையை மாற்றி அமைத்தால் நான் இந்திய சரித்திரத்தில் இடம் பெறுவேன்" என்றார்.

ஆமாம் "வினைதிட்பம் என்பது ஒருவனது மனத்திட்பம்" என்று வள்ளுவர் எப்போதோ கூறிவிட்டார். அன்று மன்மோகன் சிங் சொன்ன அதே வார்த்தையை இன்று அமெரிக்காவின் பிரபல பத்திரிகை "Washington Times" கூறுகிறது. "மன்மோகன் சிங் பிரதமராக எதையும் சாதிப்பாரோ தெரியாது. ஆனால் அவர் நிதியமைச்சராக இருந்து இந்தியாவின் நிதிநிலைமையை தலைகீழாக திருப்பியதற்காகவே அவர் என்றும் இந்திய சரித்திரத்தில் நிலைபெறப்போகிறார்" என்கிறது இப் பத்திரிகை.

1991 இல் நிதியமைச்சரான மன்மோகன்சிங் முதலாவதாக இந்தியாவின் ரூபாயின் பெறுமதியை குறைத்து அப்போது இருந்த சட்டமான வியாபாரிகள் எதற்கு எடுத்தாலும் அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும் என்பதையும் நீக்கினார். வரிகளை குறைத்தார். மூடிய பொருளாதாரத்தை திறந்து வெளிநாடுகளை முதலிட வழிவிட்டார். இவர் செய்தவை பல. இதனாலேயே இன்றைய இந்திய பொருளாதாரத்தில் இவ்வளவு முன்னுக்கு வரக்கூடியதாக இருந்தது.

**தற்காலத்தில் இலஞ்சம், ஊழல் என்பவற்றில் சிக்கி மேற்குலக நாடுகளே தவிக்கும் போது இவ்வாறு கறைபடியாத ஒரு பொருளாதார மேதை இந்தியாவின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டிருப்பது பெருமைக்குரியதே.**

மன்மோகன் சிங் அவர்கள் 1932 ஆம் ஆண்டு September மாதம் 26ஆம் திகதி மேற்கு பஞ்சாப்பிலுள்ள Gah என்னும் இடத்தில் ஒரு ஏழைக்குடும்பத்தில் பத்துப் பிள்ளைகளில் (4ஆண்கள் 6 பெண்கள்) ஒருவராக பிறந்தார். இவர் பிறந்த இடம் இப்போது பாகிஸ்தானிலுள்ளது. இவருக்கு 14வயதாக இருக்கும் போது இவரது குடும்பம் தற்போது இந்தியாவிலுள்ளது அமிர்தரஸ் (Amritsar) இற்கு இடம் பெயர்ந்தார்கள். அமிர்தரஸ் இல் உள்ள பொற்கோயிலுக்கு அருகாமையில் இவர்கள் குடியேறியிருந்தார்கள். குடும்பத்தின் நிதி நிலைமை காரணமாக இவர் மக்களின் நன்கொடைப் பணத்தில் (Charitable Trust) இயங்கும் பள்ளிக்கூடம் ஒன்றிற்கே செல்லக்கூடியதாக இருந்தது.



பாடசாலையால் வீட்டிற்கு வந்தால் வீட்டில் இருக்கும் உறவினர்களின் தொகையால் வீட்டிற்குள் இருந்து படிக்க முடியாமல் அருகே உள்ள தெருவிளக்கு வெளிச்சத்திலேயே படித்து வந்தாராம். இவரது தந்தையார் பழ வத்தல்கள் வியாபாரம் செய்யும் ஒரு கடை வைத்திருந்தார். எப்பொழுதும் தான் படித்து ஒரு பொருளாதார நிபுணராக (Economist) வந்து நாட்டின் வறுமையை போக்க வேண்டும் என்று கூறுவாராம். பின்னர் பஞ்சாப் பல்கலைக்கழகத்திலும், அதன்பின்னர் Oxford பல்கலைக்கழகத்திலும் தனது படிப்பைத் தொடர்ந்தார். இவரது கலாநிதி பட்டத்திற்கான ஆய்விற்கு "இந்தியாவின் ஏற்றுமதி வல்லமையையே கருவாக எடுத்திருந்தார். பின்னர் 1956 இல் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றினார். 1958 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி Gurusharan Kaur அம்மையாரை திருமணம் முடித்தார். இவர்களிருவருக்கும் மூன்று பெண்பிள்ளைகள்.

இந்தியாவின் பொருளாதாரத்தையே மாற்றியமைத்த கலைஞர் என புகழாரம் சூட்டும் மேற்குலகப் பத்திரிகைகள் இவரின் கறைபடியாத கரங்களை வியக்கின்றன.

தற்காலத்தில் இலஞ்சம், ஊழல் என்பவற்றில் சிக்கி மேற்குலக நாடுகளே தவிக்கும் போது இவ்வாறு கறைபடியாத ஒரு பொருளாதார மேதை இந்தியாவின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டிருப்பது பெருமைக்குரியதே.

இந்திய ஜனாதிபதி அப்துல்கலாமிடம் தான் பிரதமர் பதவி ஏற்பதற்கு தயார் என கூறிவிட்டு பத்திரிகையாளர்களை சந்தித்த பிரதமர் மன்மோகன்சிங் கூறிய வார்த்தைகள் "21ஆம் நூற்றாண்டு இந்தியாவின் நூற்றாண்டு" எனவும் "இந்தியாவின் பொருளாதாரத்தை உலகின் ஒரு மாதிரி பொருளாதாரமாக (Model of Economic) மாற்றி ஏழை மக்களுக்கும் அதில் சந்தர்ப்பம் கொடுப்பேன்" என்பதாகும்.

எவ்வாறு நிதி மந்திரிப் பதவி ஏற்கும்போது தான் கூறியதை செய்து காட்டி மேற்குலகத்தையே பிரமிக்க செய்த மன்மோகன்சிங் தனது இந்தக் கூற்றையும் மெய்ப்பிப்பிபார் என்பதில் எள்ளளவேனும் நாம் ஐயப்படத்தேவையில்லை.

நன்றி- BBC News
'Washington Times'
Srilanka Reporter
தமிழில் - சிவ ஞானநாயகன்

# வாகனங்களை அடிக்கடி மாற்றலாமா?

இம்முறை வாகனங்களை அடிக்கடி



மாற்றுவபவர்களுக்காக எனது நேரத்தை ஒதுக்கலாம் என்று இதை எழுதுகிறேன். சிலர் வாகனங்களை வாங்குவதும் குறுகிய காலத்தில் அந்த வாகனத்தை கொடுத்து வேறு வாகனத்தை வாங்குவதுமாக தங்கள் பணத்தை கரியாக்கி கொள்கின்றனர். அடிக்கடி வாகனங்களை மாற்ற விரும்புபவர்கள் தங்கள் வாகனங் களை Lease இல் எடுப்பதன் மூலம் நட்டம் அடையாமல் அடிக்கடி வாகனங் களை மாற்றக்கூடியதாக இருக்கும். Lease இல் எடுக்கும் போதும் எத்தனை வருடத்திற்கு ஒரு தடவை நீங்கள் வாகனத்தை மாற்ற விரும்புறீர்கள் என்பதைப்பொறுத்து அதற்கு ஏற்றபடி 2, 3, 4 வருடங்களுக்குரிய Lease ஐ தெரிவு செய்வது நல்லது. புதிய அல்லது பழைய வாகனங்களை வாங்கிவிட்டு அதை உடன் மாற்றுவதன் மூலம் நீங்கள் குறிப்பிட்ட அளவிலான பணத்தை கரியாக்குகின்றீர்கள் என்பதை மனதில் எப்போதும் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

சோதீஸ் - 416-704-1179


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# விவகாரத்து - மின்னல் வேகம் காட்டுகிறார்களா கனடாத் தமிழர்கள்?

மாலதி என்றுமில்லாத அளவு சந்தோசமாய் இருந்தாள். மறுபடியும் தனது பெற்றோர்களை பார்க்கப் போகின்றோம் என்ற சந்தோசம் அவளுக்கு. கனடாவுக்கு நரேனை திருமணம் முடிப்பதற்காக இரு வருடங்களுக்கு முன் கொழும்பில் இருந்து தனியாகப் புறப்பட்டு சென்றவள் இன்று தன் கணவனோடு கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில்

> கனடாவில் விவாகரத்துப் பெற்றுக் கொள்ள இரண்டு தரப்பினரும் சேர்ந்து விரும்பும் பட்சத்தில் ஐந்து மாதங்களுக்குள்ளேயே விவாகரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு கட்சிக்காரர் மட்டும் விவா- கரத்தை விரும்ப, மற்றக் கட்சிக் காரர் அதனை எதிர்க்கும் பட்சத்தில் இந்த விவாகரத்திற்கு எட்டு மாதங்கள் வரை எடுக்கும். விவாகரத்து வழக்கு நடக்கும் அதே சமயம் இன்னுமொரு பக்கமாக தாபரிப்பு வழக்கும் நடந்து கொண்டிருக்கும்.



வந்து இறங்கினாள். மாப்பிள்ளைக்கும் மகளுக்கும் உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது.

பிற்பகல் தன்னுடைய நண்பன் ஒருவரை பார்த்து விட்டு வருவதாகக் கூறி ஒரு கைப்பையுடன் சென்றார் நரேன். மறுபடியும் அவர் வந்து சேரவில்லை. மாலதி மட்டுமல்ல அனைவருமே பெரும் குழப்பத்தில் மூழ்கினர். இடம் தெரியாத சூழ்நிலையில் சமூகவிரோதிகளின் கையில் சிக்கி நரேனுக்கு ஏதும் நடந்துவிட்டதா? அல்லது தீவிரவாதி என்று தவறான சந்தேகத்தில் இராணுவத்தின் கைகளில் மாட்டிக் கொண்டுவிட்டாரா?

விடைதேடி அலைந்தனர் மாலதியும், அவள் குடும்பத்தினரும். அச்சமயத்தில் நரேன் தன்னுடையதும், மாலதியின் கடவைச் சீட்டு, மற்றும் வதிவிடப் பத்திரங்களையும் தன்னுடன் கொண்டு சென்றுவிட்டார் என்பதை அறிந்து கொண்டனர். இந்தப் பத்திரங்களுக்காக யாராவது நரேனை கொலை செய்து விட்டார்களா? பொலிசாரின் உதவியுடன் தீவிர விசாரணை தொடங்கியது. நரேன் தான் கொழும்பு வந்த டிக்கட்டில் மறுபடி கனடா போய்விட்டார் என்று பயணமுகவர் நிலையத்தின் மூலம் ஒரு தகவல் கிடைத்தது.

நரேன் ஏன் மாலதியை விட்டு விட்டு கனடா போகவேண்டும்? இன்னம் பெரிய குழப்பம் உருவாகியது. உண்மையில் கனடா சென்றது நரேனா? அல்லது அவருடை கடவைச்சீட்டை பயன்படுத்தி வேறு யாருமா? கனேடிய பொலிசாரின் உதவி நாடப்பட்டது.

கனடாவுக்கு வந்தது நரேன் தான் என்று ஓரளவுக்கு கனேடிய பொலிசார் உறுதிப்படுத்திக் கொண்டு நரேனின் வீட்டுக்கு சென்றார்கள். வீடு பூட்டிக் கிடந்தது. நரேன் வந்து ஒரு வாரகாலமாய் எந்த தொடர்பும் இல்லாமல் இருப்பதால் ஒரு வேளை உள்ளே தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்ற சந்தேகமும் பொலிசாருக்கு ஏற்பட்டது. முகத்துக்கு முகக் கவசங்கள் அணிந்து கொண்ட பொலிசார் கதவை உடைத்து

**ராது**

திறந்தனர்.

வீட்டுக்குள் சென்ற பொலிசார் சிரித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். உள்ளே நரேன் இல்லை. ஆனால் அவர் அந்த வீட்டை காலி செய்து விட்டு போவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார். நரேனின் வீட்டுப் பொருட்கள் எல்லாம் ஒரு கனேடியன் நிறுவனத்தால் வன்கூவருக்கு அனுப்பப்படுவதற்காக தயாராக கட்டி வைக்கப்பட்டிருந்தது.

நரேனுக்கும் வேறு ஒரு பெண்ணுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். அதனால் தான் நரேன் இவ்வாறு தனது மனைவி மாலதியை கொழும்பில் விட்டுவிட்டு வந்து இப்படிச் செய்கின்றார் என்று கனேடியப் பொலிசார் கூறிவிட்டனர்.

'நான் உடனடியாக கனடா வரவேண்டும் என்னுடை கடவுச் சீட்டையும், லான்டட் பத்திரத்திரத்தையும் உடன் அனுப்பிவையுங்கள்.' மாலதி தொலைபேசியில் நரேனுக்கு செய்தி அனுப்பினார். ஆனால் நரேனிடம் இருந்து மாலதிக்கு வந்ததோ விவா- கரத்து நோட்டீஸ்.


நடாவின் கதை வேறு மாதிரி. அவருக்கு கனடாவில் மூன்று வேலை. அழகான மனைவி, இரண்டு பிள்ளைகள். ஒரு வேலை முடிந்தால், அப்படியே அடுத்தவேலை. அலுக்காமல், சலிக்காமல் வேலை செய்வதில் ஒரு கில்லாடி. சம்பளக் காசோலைகளை வங்கியில் வைப்பு செய்வதற்கு கூட அவருக்கு நேரமில்லை. வேலையில் கிடைக்கின்ற சாப்பாட்டு நேரத்தில் பாதிசாப்பாடோடு எழுந்து வங்கிக்கு ஓடுவார்.

'எப்படியப்பா குடும்பத்தை கவனிக்கிறாய்' என்று கேட்டால் நடாவிடம் இருந்து மிக அலட்சியமான பதில் வரும். 'என்னுடைய மனைவிக்கு கார் பழக்கி, ஒரு காரும் வாங்கிக் கொடுத்துள்ளேன். வீட்டு வேலை, கடைக்குப் போவது, பிள்ளைகளை பாடசாலை, மற்றும் நடன வகுப்பு, பாட்டு வகுப்பு என்று கூட்டிப் போவது என்ற எல்லா வேலைகளையும் மனைவியே பார்த்துக் கொள்கின்றார். என்னிடம் கைத் தொலைபேசி உள்ளது. அடிக்கடி போன் போட்டு எல்லாமே சரியாகப் போகின்றதா என்று செக் பண்ணிக் கொள்கின்றேன். Everything is under my control'

எல்லாருக்கும் நடா ஆச்சரியம் மட்டுமல்ல. நடாமீது பொறாமையும் கூட, இப்படி நம்மால் பணம் சம்பாதிக்க முடியவில்லையே என்று. ஒரு நாள் நடாவின் கைத் தொலைபேசிக்கு ஒரு போன் வந்தது. 'உன்னுடைய மனைவி வேறு ஒருவரோடு --- ஹோட்டலில் இருக்கின்றாள்' என்று.
வேலையில் இருந்து நேராக அங்கு போனார். தொலைபேசி செய்தி உண்மைதான் என்று கண்டார். 'பணத்தை தவிர வேறு என்னத்தை நான் உன்னிடம் கண்டேன்' என்று மனைவ- யிடம் இருந்து ஆத்திரமும் அழுகையும் மட்டுமல்ல அதைத் தொடர்ந்து விவாகரத்து நோட்டீசும் வந்தது.

'விவாகரத்து செய்து கொள்வதில் கனடாத் தமிழர்கள் மின்னல் வேகம் காட்டுகின்றார்களாமே? இது உண்மையா?'

ரொறன்டோ கனடாவில் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாது ஏனைய சமூகங்களிடையும் பரபரப்பாக செயல்பட்டு வருகின்ற சட்டத்தரணி பரிஸ்டர் நாதன் ஸ்ரீதரனிடம்



கேட்டேன்.

'இலங்கைத் தமிழ் மக்களிடையே நடக்கின்ற விவாகரத்துக்களை விகிதாசார ரீதியாக நாம் ஒப்பிட்டு நோக்கும் போது, கனடாவுக்குப் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் விவா- கரத்து வீதம் அதிகமாகத்தான் இருக்கின்றது.' என்று தன்னுடைய கவலையை நாதன் ஸ்ரீதரன் என்னிடம் தெரிவித்தார். 'விவாகரத்து செய்யப் போகின்றேன் என்ற முடிவை இங்கு ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் எடுக்கின்றனர். இதில் ஆண், பெண் என்ற வேறுபாடுகள் எதுவுமே கிடையாது. மன அழுத்தமே இவர்களின் இந்த விவாகரத்து முடிவுக்கான முக்கியமான காரணம் என்று நான் சொல்வேன்' நாதன் ஸ்ரீதரன் தனது வழக்குகளில் தான் சந்தித்த அனுபவத்தைக் கூறுகின்றார்.

'மன அழுத்தமே விவாகரத்துக்கான முக்கிய காரணமென்று நான் சொல்வேன். புதிதாக குடியேறிய நாட்டில் இருக்கின்ற முற்றிலும் புதியதான சூழ்நிலை பெரு மன அழுத்தத்தை நமது மக்களுக்குக் கொண்டுவந்து சேர்க்கின்றது. குறிப்பாக வேலைப் பழு, பொருளாதார நெருக்கடி அதாவது நிதி பற்றாக் குறை என்பன மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்ற முக்கிய காரணிகளாகும். ஆரம்பத்தில் சிறு பிரச்சினையாக இருக்கும். பின்னர் வாய்த் தர்க்கங்கள் ஏற்பட்டு, அதன் மூலம் வெறுப்புகள் உருவாகி குடும்பத்தில் பெரும் குழப்பங்கள் எல்லாம் நிகழ்ந்து விவா- கரத்து வரை கொண்டு சென்று விட்டு விடுகின்றது.' திருமணமாகி எவ்வளவு நாட்களில் இந்த திருமண முறிவு என்கின்ற அதிரடி முடிவை இவர்கள் எடுக்கின்றார்கள் என்று நாதன் ஸ்ரீதரனிடம் கேட்டேன்.

'ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் விவா- கரத்து எடுப்பது என்பது மிக மிகக் குறைவு. என்னிடம் வந்த வழக்குகளைப் பொறுத்தவரை திருமணமாகி இரண்டு வருடம் முடிய முன்னரே விவாகரத்து என்று கேட்டு வந்தவர்கள் இருக்கின்றனர். அது மட்டுமல்ல பத்து வருடத்திற்கு மேலாக தம்பதிகளாக வாழ்ந்தவர்களும் விவாகரத்துக் கேட்டு வந்துள்ளனர். இவர்களுடைய வயது 25 - 40க்கும் இடைப்பட்டதாகவே இருக்கின்றது.

கனேடிய நீதிமன்றம் விவாகரத்திற்கான அனுமதியை எந்த அடிப்படைக[ள்] வழங்குகின்றது? என்ற கேள்வி[யை] கேட்டதும் சற்று சந்தேகத்துடன் நம்[மை] ஏறிட்டு நோக்கினார்.

'இந்தக் கேள்விக்குப் பதில் அளித்[தால்] அதை வைத்தே நீங்கள் விவாகரத்தி[ற்கு] விண்ணப்பம் செய்து விடலாம்' எ[ன்று] நகைச்சுவையாகக் கூறிச் சிரித்த நா[தன்] ஸ்ரீதரன் தன்னுடைய பதிலைத் தொடர்ந்[தார்]. 'ஒரு வருடத்திற்கு மேலாக கணவ[னும்] மனைவியும் எந்த வித தொடர்பும் இன்[றி] பிரிந்திருந்தால், தொடர்ச்சியான வன்முறை[கள்] ஒரு குடும்பத்தில் நடந்து கொண்டிருந்த[ால்,] நோய்கள் காரணமாக குடும்பம் நட[த்த] முடியாது என்ற சூழ்நிலை இருப்பதா[க] கருதப்பட்டால், அல்லது கணவனுக்கோ மனைவிக்கோ வேறு ஒருவருடன் ந[...] இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் நீதி மன்[றம்] விவாகரத்தை வழங்குகின்றது.'

விவாகரத்தின் போது பெண்கள் பொருளா[தார] ரீதியாகப் பாதிக்கப்படுகின்றார்களா? எ[ன்று] கேட்டோம். ஏன் என்றால் நம்முடை[ய] கலாசாரப்படி கணவன் வேலைக்குப் போ[க] குழந்தைகளைப் பராமரிப்பதில் இரு[ந்து] அனைத்து வீட்டு வேலைகளையும் பெண்த[ான்] மாய்ந்து மாய்ந்து பல இடங்களில் செய்[து]

> விவாகரத்துக்காக நீதி மன்றத்தின் படிகளில் ஏறி இருக்கின்ற தம்பதியினரின் குழந்தைகளின் எதிர்காலம், யாருடன் இந்தக் குழந்தைகள் வாழப்போகின்றார்கள் என்பன இந்த தாபரிப்பு வழக்கின் முக்கிய கேள்விகளாகும்.

கொண்டிருக்கின்றாள். திருமண முறி[வு] ஏற்படும் போது வேலைக்குப் போகா[த] இவளுக்கு சொத்தில் பங்கு எதுவும் இல்லை என்று ஆகி கறிவேப்பிலை போ[ல] பெண்களைத் தூக்கி எறிந்து விட்டு போய்விட சந்தர்ப்பம் உள்ளதா?

'இந்த இடத்தில் கனேடிய சட்[டம்] பெண்களுக்கு சாதகமாகத் தா[ன்] இருக்கின்றது. திருமணத்திற்குப் பின்[னர்] வாங்கப்படுகின்ற எந்த ஒரு அசைய[ாச்] சொத்திலும், உதாரணமாக வீடு என்[று] வைத்துக் கொண்டால், மனைவி வேலைக்கு[ப்] போனாலும் சரி போகாவிட்டாலும் சரி எந்த[வித] பிரச்சனையும் இல்லாமல் அதில் மனைவிக்[கு] அரைவாசிப் பங்கு போய்ச் சேரும். அ[தே] நேரம் கணவன் வேலைக்குப் போகா[மல்] மனைவிதான் வேலைக்கு போயிருந்தாலு[ம்] அரைவாசிப் பங்கு கணவனுக்குப் போய்[ச்] சேரும்.' என்று நாதன் ஸ்ரீதரன் குறிப்பிட்டார்.

இந்த திருமணமுறிவுகளுக்கான காரணங்க[ள்] அனுபவங்கள் பற்றி பாதிக்கப்பட்ட தம[ிழ்] பெண்களுக்காக கனடாவில் தொடர்ந்[து] சேவையாற்றும் விரிவுரையாளரு[ம்] பெண்ணியத்துக்காக குர[ல்] எழுப்புகின்றவருமான பார்வதியிட[ம்] கேட்டோம். அவர் சொல்லிய விடயங்கள் பெரும் அதிர்ச்சியை தந்தன. தமி[ழ்] சமூகத்தின் புரையோடிப்போன பக்கங்களை எடுத்து நமக்கு அவர் காட்டினார்.

அடுத்த இதழில் அதைப் பார்ப்போம்

# மெதுவாக உன்னைத் தொட்டு

## விமர்சனத்தில் விமர்சனம்

அழகிய சிற்பம் ஒன்றினை செதுக்குவதற்கு உளியின் பங்களிப்பு எவ்வளவுவோ அவ் வளவே கலைஞர்களுக்கு விமர்சனங்கள் ஆகும். அதிலும் திரைப்படங்கள் பற்றிய விமர்சனங்கள் அவற்றின் வெற்றியையும், போட்ட முதலுக்கு மோசமா இல்லையா என்பதனையும் நிர்ணயிக்கின்றன. வேலை பெருகி நேரம் அருகிவிட்ட இன்றைய வாழ்க்கையில் ஈழத்தமிழர்களின் திரைப்பட தயாரிப்புக்களுக்கு ஆதரவு கொடுத்து வளர்த்துவிட வேண்டும் என்ற ஆவல் இருந்தும், தயாரிப்புக்கள் அதிகரித்து வரும் இவ்வேளையில் தரமான படைப்புக்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்ற சூழ்நிலை உருவாகின்றது. தரமான படைப்புக்கள் என்று எப்படி அறிந்து கொள்ளலாம். தமிழ் தொலைக்காட்சிகள் பத்திரிகைகளில் வரும் துண்டுக்காட்சிகளிலும், விமர்சனங்களில் இருந்தும் அறிந்து கொள்ளலாம். பொதுவாக தொலைக்காட்சிகளில், குறிப்பிட்ட திரைப் படத்தில் இருந்து மக்களைக் கவரக்கூடிய

### சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

வகைகளில் அமைந்திருக்க கூடிய நல்ல காட்சிகளையே காட்டுவார்கள்.

'மெதுவாக உன்னை தொட்டு' என்ற திரைப்படம் பற்றிய ஒரு சில காட்சிகளை மாருதி தொலைக்காட்சியில் பார்த்ததாக ஞாபகம். இலங்கையில் இருந்து புறப்பட்டு இந்தியா சென்று கனடா வந்த ஒருவன் பற்றிய கதை என்று அறிந்து கொள்ள கூடியதாக இருந்தது. கனடாவிற்கு அகதிநிலை கோரி வந்தவர்களில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டவர்களது சொந்தக் கதைகளை ஞாபகப்படுத்தக்கூடியதாக இருந்த போதும், அதில் காட்டப்பட்ட சில காட்சிகள் இந்திய தமிழ் திரைப்பட பாணியில் காதல், சண்டை காட்சிகளும், கனடாவில் கரு கந்தையா, சுரேஸ் ராஜாவை கவுண்டமணி பாணியில் அடிப்பது போன்று அமைந்தி ருந்ததை பார்த்ததுமே ரவி அச்சுதன் இலங்கை தமிழனின் கதையை இந்திய திரைப்படபாணியில் சொன்னால் தான் போட்ட முதலுக்கு மோசம் போகாமல் இருக்கும் என்று எண்ணிவிட்டாரோ என்று எண்ண வைத்தது. ஆனாலும் நல்ல 1ஆற்றலும், ஆர்வம் மிக்க ரவிக்கு ஆதரவுக்காகவாவது திரைப்படத்தை நேரம் கிடைக்கும் போது போய்ப்பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு இருந்த வேளையில் May 27 'சுதந்திரன்' பத்திரிகையில் சுமதி ரூபன், வைரமுத்து சொர்ணலிங்கம் ஆகியோர்களது விமர்சனங்களை பார்த்ததும் நேரமின்மையே பெரிதாக தோன்றுகின்றது. அவர்கள் இரு வரது விமர்சனங்களும், 'விளம்பரம்' பத்திரிகையில் சினிமா பற்றி எழுதும் ரதன் அவர்களது கருத்துக்களை கேட்டதும் எனது ஊர்ஜிதம் சரி என்றே பட்டது. ஆர்வம் குறைந்தது.

ஆர்வம் மற்றும் ஆற்றல் மிக்கவர்கள் எம்மிடையே இருந்தும் என்ன காரணத்திற் காக தரமான திரைப்படங்களை, தொலைக் காட்சி குறும்படங்களை எம்மால் தரமுடியா மல் இருக்கின்றது என்று சிந்தித்த தில் எண்ணங்கள் 1986ஆம் ஆண்டில் இருந்து நடந்தவற்றை அசைபோடவைத்தன. திரைப் படங்கள், தொலைக்காட்சிகள் தயாரிப்பதில் அனுபவம் பெற்றவர் களும், பயிற்சிபெற்றவர் களும் எம்மிடையே இருந்தும், பொருளா தார வசதி இன்மையால் அதுபற்றி சிந்திக்கமுடியவில்லை. ஆர்வம் மிகுந்த ஒரு சிலர் Video Camara ஒன்றை வாங்கினால் கலியாண வீடுகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் செய்து பணம் சம்பாதிக்க லாம். அதேவேளை திரைப்படங்கள் எடுப்பதற்கு அதை ஆரம்பமாக கொள்ளலாம் எனக் கருதினர். போட்டி அங்கு தான் ஆரம்பமானது. வாங்கிய Video camara வின் model number ஐயும் பெயரையும் மறைத்து Tape ஒட்டத் தொடங்கினார்கள். காரணம் மற்றவர்களும் அந்த model ஐ பார்த்து video வாங்கினால் உழைப்பில் போட்டி வந்துவிடும் என்ற தாராள மனப்பான்மை.

திரைப்படங்கள் என்று தயாரிக்க தொடங்கிய வர்கள் எல்லோருமே தம்மை பாரதி ராஜாக்கள், பாலு மகேந்திராக்கள் என்று எண்ணிக்கொண்டார்கள். எம்மிடையே உள்ள அனுபவம் மிக்கவர்களது உதவியை தேட விரும்பவில்லை. ஒன்று தமது அறிவு பற்றி மற்றவர்களுக்கு தெரிந்து விடும் என்ற பயம் அல்லது தமக்கு தெரிந்த வற்றை மற்றவர்கள் தெரிந்து கொண்டு போட் டியாக படம் தயாரிக்க தொடங்கி விடுவார்கள் என்ற நல்ல காரணங்களா கவும் இருக்கலாம். எது எப்படியோ, ரவி அச்சுதன் அவர்களுக்குள் இருந்து வேறுபட்டு நம்பிக்கை தரக்கூடிய வகையில் சில தயாரிப்புக்களைத் தந்தார். அனால் வைர முத்து சொர்ணலிங்கம் விமர்சனத்தில் சொன்னது போல சரியான உதவி யாளர்களை தேவைக்கு



வைத்திருக்க வேண்டும். இயக்குனர் என்பவர் எதற்கும் பயப்படாமல் ஆற்றல் அனுபவம் உள்ளவர்களைக்கொண்டு நல்லமுறையில் வேலை வாங்கியும், ஆர்வம் மிக்கவர்களுக்கு தெரிந்தவற்றை சொல்லிக்கொடுத்து உத விக்கு வைத்து கொண்டால் சிறந்த படைப்புக்களைத் தருவதுடன் வேலையும் இலகுவாக நடக்கும். ஆற்றல் மிக்கவர்களை உருவாக்கிய பாரதிராஜா போல மதிக்கவும் படுவார்கள் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

திரைப்படம் பார்ப்பவர்கள் அனைவரையுமே ஒரே நேரத்தில் தமது பழைய கால நினைவுகளை அசைபோட வைத்த திரைப்படம் ஒட்டோகிராப். சினிமாத்தனம் அதிகமில்லாமல் விடலை பருவ காதல் அனுபவங்களை விரசமில்லாமல் சொல்லி, கேரள பெண்ணை காதலிக்க நீ யார்? தமிழ்பட்டி (நாய்) என்று சொல்ல, அடி வாங்கி களைத்து இருந்தும், பொங்கி எழுந்து திரைப்படத்தை பார்த்து கொண்டு இருக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் ரோச நரம்புகளை முறுக்கேற்ற வைக்கும் அளவிற்கு காட்சிகளை அமைத்தும், மல்லிகா என்ற பெயரில் உள்ள அத்தனை ரீச்சர் மார்களையும் அவர்களது மாணவர்கள் மறக்காமல் இருக்க வைக்கும் வகையில் பாடலை வைத்த சேரன், இசையில் இளையராஜாவுடன் இணைந்து இருந்தால் ஓட்டோகிராப் ஒரு காவியமாகி இருக்கும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

சிந்தனை தொடரும்

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்

## விமர்சனக் கடிதம்: பச்சாதாபம்

சென்ற இதழில் வெளியான "ஒரு சாதாரண மனிதன் பரம் ஜி" யில் பச்சாதாபம் எனும் அவரின் சிந்தனை சம்பந்தமாக நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மனித அழிவுகள், மனித வதைகள் பற்றி கருத்துகள் வெளியிடும் போது இவ் அழிவுகள், சித்திரவதைகள் யாரைப் பாதிக்கின்றனவோ அல்லது யாரால் நிகழ்த்தப்படுகின்றனவோ என்பதை விட இவை "மனித நாகரீகத்திறக்கு அப்பாற்பட்டவை" என்பதில் எனக்கும் பரம் ஜிக்குமிடையில் எவ்வித கருத்துவேறுபாடும் கிடையாது என நினைக்கிறேன். கொலைகள், பாலியல் துன்புறுத்தல்கள், உள/உடல் ரீதியான துன்புறுத்தல்கள் எல்லாமே காட்டு மிராண்டித்தனமானவை தான். இவை யாவுமே கண்டிக்கப்படவேண்டியவை. இன்னும் சிறப்பாகச் சொல்லப்போனால் பிழைகள் திருத்தப்பட்டு நீதி வழங்கப்படவேண்டியவை.

"கண்டனம் செய்வதற்கு ஒரு அருகதை இருக்க வேண்டும்" என்று அவ்வினதத்தவர் மீது சீறிப்பாயும் இந்த சாதாரண மனிதனிடம் ஒரு கேள்வி. எம் தமிழன மக்களுக்கு அந்த அருகதை இருக்கிறதா? நான் கூட ஈழத்தமிழர்களின் கண்டன ஊர்வலங்களில் கலந்து கொண்டு ஈழமக்களின் அவலங் களுக்குக் காரணமானவர்களுக்கு எதிராகக் கோஷம் எழுப்பியதைத்தவிர தமிழர்களாகிய நாம் மற்ற இனத்தவர்க்கு நிகழ்த்திய கொடூரங்களை நினைத்துக்கூடப் பார்க்க வில்லை. நினைக்க விரும்பியதுமில்லை.

ஏன்? இது ஒரு Simple Theory! எந்த ஒரு சாதாரண மனிதனும் தனக்கு அல்லது தன்னைச் சார்ந்தவனுக்கு இடர் வரும்போது ஆர்ப்பரிப்பானேயொழிய தான் செய்த பிழை யான விடயங்களை அப்போது நினைவு கூருவதில்லை. ஒரு சாதாரண மனித பலவீனமும் இதுதான்.

ஆஹா, அமெரிக்காவின் தலைசிறந்த ஜனநாயகத்திற்கு ஒரு சபாஷ்! உலக வரலாற்றிலேயே விட்ட ஒரேயொரு பிழைக்கு மன்னிப்புக் கேட்டு, சம்பந்தப்பட்டவர்களை விசாரணை நடத்தி தண்டனை விதிக்கவும் தயார். உண்மை என்னவெனில், தற்செய லாக Internet மூலமாக வெளிவந்த இந்தப்படங்களின் மூலம்தான் அமெரிக்க அரசாங்கம் சிக்கலில் மாட்டிக்கொண்டது என்பது பரம் ஜிக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை போல் தெரிகிறது. மேலும் ஆயிரக்கணக்கான புகைப்படங்களும் அவற்றில் ஈடுபட்ட இராணுவத்தினர் பலரின் விபரங்களும் இன்னும் உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளன. ஈராக்கிய பயங்கரவாதி களின் Nicholas Bers மீதான காட்டேறித் தனமான கொலையும், ஏனைய பல கொடுமை வாய்ந்த கொலைகளும் எவரையும் ஆத்திரப் படவைக்கும் தான். அதில் சந்தேகமே யில்லை. ஆனால் ஜனநாயகத்திற்கே வரைவிலக்கணம் கொடுக்கும் அமெரிக்காவும்

தொடர்ச்சி 18ம் பக்கம்

Special
Rogers Cable
Installation Offer
எப்பவும் இல்லாத விஷேட சலுகை இந்த மாதம் மட்டுமே முந்திடுவீர்!!
No Connection Fee. No Contract
Rogers
Hi Speed Internet
2 Months Free
Save upto $110
TV - Cable Service
1 st month free
3rd Month $15 Rebate
Save up to $120
கனடாவின் முன்னணி நிகழ்ச்சிகளை வழங்கும் Tamil Vision (TVI) பார்க்க ஆர்வமா?
அழைத்த அதே நாளில் உங்கள் இல்லம் வந்து இலவச இணைப்பை ஏற்படுத்தி தருகிறோம். மீண்டும் உங்களிற்காக ஒரு மாத காலத்திற்கு இலவசம்.
Computer Truble Shoot Specialist தமிழில் தொடர்புகளுக்கு எந்நேரமும் அழையுங்கள்
Sanjay - 416-315-2917



வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில் முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்
Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.
www. themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)
HomeLife Higher Standards
themathuram.com

# FRENCH OPEN 2004

## விளையாட்டு செய்திகள்
### எஸ். கணேஷ்



ஒரு காலத்தில் பெண்கள் ரெனிஸ் பிரிவில் அமெரிக்க ஆதிக்கம் (மார்டினா நவரதினலோகா, கிறிஸ்) மறைந்து ஜேர்மன் ஆதிக்கம் வந்தது. (ஸ்ரெபி கிராஃப்), பின்பு ஜேர்மன் ஆதிக்கம் மறைந்து அமெரிக்க கறுப்பின சகோதரிகளின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. பின்பு பெல்லியம் வீராங்கனைகளின் ஆதிக்கம் வந்து தற்போது ரஷ்ய வீராங்கனைகளின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.

107 ஆண்டுகால பிரெஞ்சு ஓபன் வரலாற்றில் ரஷ்ய யாரும் பதக்கம் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னதாக ஓல்கா மோரஸோவா (1974), நடாசா ஜவேரவா (1988) ஆகிய இருவரும் இறுதிச் சுற்றை மட்டுமே எட்ட முடிந்தது.

பாரீஸில் நடைபெற்ற மகளிருக்கான முதல் அரையிறுதி ஆட்டத்தில் ரஷ்யாவின் எலீனா டேமன்டீவா ஆர்ஜென்டீனா வீராங்கனை பாவலா சுராஸினை தரவரிசையில் 9வது இடத்தில் உள்ள டேமன்டீவா, 1 மணி 24 நிமிடங்களில் வெற்றிக் கனியைப் பறித்தார். 22 வயதாகும் டேமன்டீவா அரையிறுதியில் விளையாடிய இரணடாவது கிராண்ட் ஸ்லாம் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் 16 ஆண்டுகளுக்குப் பிறகு இப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய முதல் ரஷ்ய வீராங்கனை எனும் சிறப்பையும் பெற்றுள்ளார்.

### பிரெஞ்சு, ஓபன் டென்னிஸ்: மகளிர் ஒற்றையர் பிரிவில் 'அனஸ்தாசியா மிஸ்கினா சாம்பியன்'

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை ரஷ்யாவின் அனஸ்தாசியா மிஸ்கினா கைப் பற்றினார். வருடத்தின் இரண்டாவது கிரான்ட் ஸ்லாம் போட்டியான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிகள் பாரிஸில் நடைபெற்று முடிந்துள்ளன. மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த வீராங்கனையான அனஸ்தாசியா மிஸ்கினா, எலினா டெமன்ட்டியேவா இருவரும் மோதினர். இந்தப்போட்டியில் மிஸ்கினா வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார். இது இவருக்கு முதல் கிரான்ட்ஸ்லாம் பட்டமாகும். மேலும் 30 வருடங்களுக்கு பின்னர், கிரான்ட்ஸ்லாம் பட்டத்தை முதன் முறையாக ரஷ்ய வீராங்கனை ஒருவர் கைப்பற்றியுள்ளார். இறுதிப்போட்டியில் 59 நிமிடங்களில் மிஸ்கினா வெற்றிபெற்றார்.

### லேடன் ஹுவிட் அதிர்ச்சித் தோல்வி

பாரீஸில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையருக் கான காலிறுதி ஆட்டத்தில் காடியோஉலகின் முன்னாள் முதல் நிலை வீரர் லேடன் ஹுவிட்டை (அவுஸ்திரேலியா) அதிர்ச்சி தோல்வியடையச் செய்தார். ஆட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய காடியோ, 1மணி 43 நிமிடங்களில் வெற்றியைச் சுவைத் தார். தரவரிசையில் ஹீவிட் 12வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

### பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்

ஆடவர் ஒற்றையர் பிரிவில் கஸ்டோன் காடியோ (Gaston Gaudio) சாம்பியன். பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை ஆர்ஜென்டினா வின் கஸ்டோன் காடியோ சாம்பியன் பட்டம் வென்றார். பாரிசில் நடைபெற்ற பிரெஞ்சு ஓபன் கிரான்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்தவர்களான கில் லர்மோ கோரியா, கஸ்டோன் காடியோ இருவரும் மோதினர்.



பிரெஞ்ச் ஓபன் கோப்பையுடன் அனஸ்தாசியா மிஸ்கினா

இந்த போட்டியில் காடியோ வெற்றி பெற்றார். பிரெஞ்ச் ஓபன் டென்னிஸில் பட்டம் வென்ற தரவரிசையில் இடம்பெறாத 3வது வீரர் காடியோ ஆவார். 25ஆண்டுகளுக்குப் பின்னர் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த வீரர் ஒருவர் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை முதன் முறையாக வென்ற பெருமையை காடியோ பெற்றார். 27ஆண்டுகளுக்கு முன்பு கில்லமோ விலாஸ் பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்றதற்குப் பின்பு ஆர்ஜென்டினாவைச் சேர்ந்தவீரர் ஒருவர் பிரெஞ்சு ஓபன் பட்டம் வெல்வது இதுவே முதன் முறையாகும். ஆர்ஜென்டினாவிற்கு இது 5வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும்.

இறுதிப் போட்டியில் முதல் இரண்டு செட்களையும் இழந்தாலும், அதன் பின்பு 3செட்களையும் கைப்பற்றி சாம்பியன் பட்டத்தை காடியோ தட்டிச் சென்றார். 4வது செட்டின் போது இடது காலில் ஏ காயத்திற்கு கோரியா சிகிச்சை எ கொண்டார். அதன் பின்பு பெயரள கோரியா விளையாடினார். இரண்டு சாம்பியன் ஷிப் பாயிண்டுகளை (Cho Ship Points) பெற்றாலும் இதில் வெற் தவறிய கோரியா இறுதியில் தோல் தழுவினார்.

பிரெஞ்சு ஓபன் தரவரிசையில் இடப் ஒருவீரர் சாம்பியன் பட்டம் வெல்வது 3வது முறையாகும். இதற்கு முன்பு 1 ஆண்டு நடைபெற்ற பிரெஞ்சு 1982இல் மாட்ஸ் விலாண்டரும் தரவரி இடம்பெறாத நிலையில் பிரெஞ்சு ஓபன் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த சாம்பியன் பட்டமானது காடியே 3வது பட்டமாகும். 2003ஆம் ஆன பின்னர் காடியோ வெல்லும் முதல் இதுவாகும்.


NTE AUTO
New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.



ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ்
இடம் பெறும்போது


- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




June 30 2004 வரையும் புதிய பழை வாகனங்கள் வாங்குபவர்களிற்கு பல்லாயி பரிசில்கள் காத்திருக்கின்றன.

416-704-117

அலுவலக நேரம்
Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm
Tues., Wed.: 12 noon - 9:00 pm
4334 Kingston Rd, Scarborough



# நிர்மாணத்துறை ஒன்ராயோவிற்கு வலுவூட்டுகிறது




பொருளாதாரத்தில் இறக்கம் ஏற்படும்போது இதற்கு முட்டுக்கொடுப்பதற்கு அரசு ஏதாவது ஊக்க வழிவகைகள் செய்வது இயல்பான-தாகக் காணப்படும். கடந்த சில வருடங்களாக பொருளாதாரம் இறங்குமுகமாக இருந்த போது வீட்டு வியாபாரம் சம்பந்தமான பொருளாதாரத்தில் அதீத வளர்ச்சி காணப் பட்டது. இதனால் ஒன்ராரியோ பொருளதார திற்கு போதிய ஊக்க மருந்தாகக் காணப் பட்டது. உதாரணமாகக் கூறப்போனால் 2003ஆம் ஆண்டு, புதிய வீட்டின் நிர்மாணத் துறையும், வீட்டைப் பழுது பார்த்தலும் , திருத்தல் வேலைகளினாலும், ஒன்ராரியோ வின் பொருளாதாரத்திற்கு 2 பில்லியன் பெறுமதியான பணம் சேர்க்கப்பட்டது. அத்துடன் 447,846 தொழில் வாய்ப்புகளும் ஏற்பட்டது. இந்த எண்ணிக்கைகளை முந்திய ஆண்டுடன் (2002) ஒப்பிட்டு பார்க்கும்போது, வருமானத்தில் 19% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2002 இல் உருவாகிய தொழில்வாய்ப்பு 430,322 ஆகும். கடந்த பல வருடங்களில் புதிய வீடுகளின் விற்பனைகளும் அதிக ரித்து வருவதை அவதானிக்கக்கூடிய தாக உள்ளது. இதற்கு கடந்த 40வருடங்களில் குறைந்த வட்டி வீதமும் காரணமாகக் கொள்ளலாம்.

பொதுவாக ஒரு புதிய வீடு கட்டத் தொடங்கும் போது 3.3 முழுநேரமாக தொழில்புரிபவர்களிற்கு வேலை கிடைக்கின்றது. 2002ஆம் ஆண்டின் மட்டும் புதிய வீடுகள் நிர்மாணிக்கத் தொடங்கியதால் மட்டும் 168,000 தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. 2003 இல் கனடாவின் GDP (Gross Domestic Product) இற்கு கட்டிய நிர்மாணத்துறையில் மட்டும் 18 Billion சேர்க்கப்பட்டுள்ளது. GTA இல் ஏற்படும் நிலப்பற்றாக்குறையால் புதிதாக நிர்மாணிக்கப்பட இருக்கும் விலையில் அதிகரிப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

> *புதிய வீடு கட்டத்தொடங்கும் போது 3.3 முழுநேரமாக தொழில்புரிபவர்களிற்கு வேலை கிடைக்கின்றது. 2002ஆம் ஆண்டின் மட்டும் புதிய வீடுகள் நிர்மாணிக்கத் தொடங்கியதால் மட்டும் 168,000 தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.*

கட்டிடத்துறையில் சகலராலும் நன்கு அறியப்பட்ட CLAYTON குறூப்பினரின் அண்மைய ஆராட்சிக்கட்டுரையின் தகவ லின்படி, கனடாவின் வீட்டு நிர்மாணம், திருத்தவேலைகள் சம்பந்தப்பட்ட தொழி ல் 6.5% ஆல் வளர்கின்றது என தெரிகின்றது. இது கனடாவின் பொருளா தார வளர்ச்சியின் இரண்டுமடங்காக காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாகக் கொள்ளக்கூடியது குறை ந்த வட்டிவீதம்.

*வீட்டு வியாபாரத்தில் 1997 இற்கு முற்பட்ட நிலமை தோன்றுமா?*

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

ஆண்டு 1987 இற்கு 1995 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒன்ராறியோவில் ஆட்சியில் இருந்து NDP, LIBERAL ஆட்சிகள் 2000 இலிருந்து 3000 வரையான வீடுகளை நிர்மாணித்து வருமானம் குறைந்தவர்களுக்கு வயதானவர்களுக்கும் வழங்கி வந்தது. அதற்கு அப்புறம் ஆட்சிப்பீடத்தில் ஏறிய மைக் ஹரிஸ் நிர்வாகம் இந்த எண்ணிக்கையை பூச்சியமளவிற்கு குறைத்து வந்தது. இதனாலும், Aptartment Vacancy Rate மிகக் குறையத் தொடங்கியது. இதனால் முதலீட்டாளர்கள் கட்டிடங்களையும், வீடு களையும் கட்டத் தொடங்கினார்கள். வீட்டு வியாபாரம் கடந்த 8 வருடங்களாக



ஆரோக்கியமாகக் காணப்படு கின்றது. புதிதாக ஒன்ராறியோ வில் ஆட்சிக்கு வந்த அரசு, 1995 இற்கு முன்பாக இருந்தது போல, வருமானம் குறைந்தவர் களிற்குரிய வீடுகளைக் கட்டிக்கொடுப்பதாக தீர்மானித்துள்ளது. இதன் முதற்படியாக 9 புதிய திட்டங்களுக்கு (Project) அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனால் எதிர்வரும் இரு வருடங்களில் குறைதது 900 அலகுகள் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாடகைக்கு இருப்பவர்கள் Credit Card மூலம் வாடகை செலுத்தலாம். யூன் 01 ஆம் திகதி முதல் GTA இல் இருக்கும் வாடிக்கையாளர்கள் தமது வாடகைப் பணத்தை Credit Card மூலம் செலுத்தக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.


ரொறொன்ரோவின் வெற்றிட அளவு (Vacancy Rate) அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இதனால் வாடகைக்கு குடியிருப்பவர்கள், வீட்டுச் சொந்தக்காரரிட மிருந்து சில சலுகைகளையும் பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. இன்றைய Vacancy Rate கடந்த வருடத்திலிருந்ததை விட 27% அதிகரித்துள்ளது. இப்போதைய Vacan cy Rate 4.77% ஆகக் காணப்படுகின்றது. மாத வாடகை குறைகின்றது. அனேக அடுக்குமாடிக் கட்டிடங்களில் 'வாடகை' என்ற அடையாளத்தை இலகுவாக அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இந்நிலமை சிலகாலம் தொடரும் என்பதனை அனுமானிக்கக் கூடியதாக வுள்ளது.

• • •

## Interest Rate

| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 5.30% |
| 3 Yrs Mortgage | 4.70% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |


**Morningside/Finch**



**$344,900**
4+2 Bedrooms
4 Washrooms
2 Kitchens

**Markham/Sheppard**




**$299,900**
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchen

**McCowan/16th Ave.**




**$289,900**
3 Bedrooms
3 Washrooms
1 Kitchen

**Markham/Denision**



**$314,900**
3 Bedrooms
3 washroom
1 kitchen

**Sheppard E Of Allen**




**$194,900**
2 Bedrooms
2 Washrooms
1 Kitchen

**Pharmacy/Lawrence**



**$349,900**
3 Bedrooms
2 Washrooms
2 Kitchen

**Bellamy/Lawrence**



**$298,000**
3+2 Bedrooms
2 Washrooms
2 Kitchen

**Finch/Middlefield**



**$339,900**
3 Bedrooms
3 Washrooms
1 Kitchen

**Markham/Sheppard**



**$264,900**
3+1 Bedrooms
3 Washrooms
1 Kitchen

**McCowan/Sheppard**



**$159,900**
2 Bedrooms
1 Washrooms
1 Kitchen

**Finch/Birchmount**



**$175,900**
2+1 Bedrooms
2 Washrooms
1 Kitchen

**Markham/Eglinton**



**$138,900**
2 Bedrooms
2 Washrooms
1 Kitchen




**Raja M. Mahendran**, P.Eng
Broker / Owner
**HOMELIFE/GTA Realty Inc.**
1711McCowan Rd. Suite 206. Toronto. ON M1S-௭௧௦

HOMELIFE
HIGHER STANDARDS

ராஜா மகேந்திரன்
Broker/Owner
**Cell: 416-315-9397**
**Off : 416-321-6969**



!! இன்றைய சேவையே நாளைய வளர்ச்சி !!

# மருந்துவகைகளைக் கொண்டு நோய்களை எப்படிக் குணப்படுத்துவது

‘சமன சிகிச்சைமுறை’ இல் மருந்து வகைகளைக் கொண்டு நோய்களை எப்படிக் குணப்படுத்துவது என்று கவனிப்போம்.

இம்மருந்துகள் யாவும் உயிர்களுக்கு எதுவித குழப்பமும் ஏற்படுத்தாது நோய்க்காரணிகளை நீக்கவேண்டும். இதற்கு மருந்துக்காரணிகளை நுண்ணியப்படுத்தி (Atomize) ஆனால் வீரியப்படுத்தி (Potentise) பலப்படுத்தி மருந்துகள் பாவிக்கப்படுகின்றன. இதை நன்கு விளங்கிக்கொள்வதற்கு மின்சாரத்தைக் கவனிப்போம். அது எமது கண்களுக்குத் தெரி-வதில்லை ஆனால் அதன் அதிசக்தியைப்பற்றி எவரும் அறிவர்!. இந்த மின்சாரம் எப்படி உருவாகிறது?, நீர் அதிக வேகமாக ஓடும் விசையால் உருவாகிறது. ஒரு கல்லுடன் ஒரு கல்லை உரசினால் நெருப்பு உருவாகும் என்பதை நாம் அறிவோம். ஒரு மரக்குத்தியில் இன்னொரு மரக்குத்தியை பலமாக உராசுவதாலும் நெருப்பு உருவாகும் என்பதையும் எவரும் அறிவர். இதன் தத்துவத்திலேயே ஹோமியோபதி வைத்தியத்தில் மருந்துகள் பலப்படுத்தப்பட்டு நோய்களைத்தீர்க்க உபயோகிக்கப்படுகின்றன. தாவரங்கள், மிருகங்கள், உலோகங்கள், உப்புக்கள் ஆகியவற்றிலிருந்து மருந்துகள் பெறப்படுகின்றன. அப்படிப்பெறப்படும் மருந்துகள் தாய்த்திரவம் எனப்படும். இவற்றிலிருந்து ஒரு சொட்டு தாய் திரவத்தை 9 சொட்டு மதுசாரத்தில் விட்டு அரைமணி நேரம் அதிவேகமாகக் குலுக்கினால் முதலாவது தசம வீரியம் கிடைக்கும். ஒரு சொட்டு தாய் திரவத்தை 99 சொட்டு மதுசாரத்தில் விட்டு அரை மணிநேரம் அதிவேகமாகக் குலுக்கினால் வருவது முதலாவது சதம வீரியம்.

தாய்த்திரவம் Q எனக்குறிப்பிடப்படும். தசம வீரியம் அந்த வீரியத்திற்கு அருகில் X எனக்குறிப்பிடப்படும். சதம வீரியத்திற்கு அருகில் C எனக் குறிப்பிடப்படும். உதாரணத்திற்கு முப்பதாவது தசம வீரியம் 30 X



## சமணசிகிச்சை

## (Homeopathy)

எனக்குறிப்பிடப்படும். இருநூறாவது தசம வீரியம் 200 X எனக்குறிப்பிடப்படும். சதம வீரியமும் முப்பதாவது வீரியம் 30.C என்றும் இருநூறு சதம வீரியம் 200.C என்றும் குறிப்பிடப்படும். கரையாத உப்பு, உலோகம், இன்னும் வேறு மருந்துகளை ஒரு கிறெயின் மருந்தை 9 மடங்கு பால்ச்சீனியுடன் சேர்த்து அரைமணி நேரம் வேகமாக அரைத்தால் முதலாவது தசம வீரியம் வரும். அந்த வீரியத்திலிருந்து ஒரு கிரேயின் வீரிய மருந்தை எடுத்து 9 கிரேயின் பால்ச்சீனியுடன் சேர்த்து அரை மணிநேரம் அரைத்தால் வருவது இரண்டாவது தசம வீரியம் இப்படியே முப்பதாவது வீரியம் தயாரிக்கப்படும். முப்பதாவது வீரியத்திலேயே அதிகமான மருந்துகள் நன்கு வேலை செய்யுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. உயிர் உப்புக்கள் 6 அல்லது 12வது தசம வீரியத்திலேயே திறமாக வேலைசெய்யும் எனக் கண்டறி யப்பட்டுள்ளது. அதிகமாக உயிர் உப்புக்கள் (Bio-Chemic) தசம வீரியத்திலேயே தயாரிக் கப்படும். மனித உடம்பில் உயிர்உப்புக்கள் 6 வது தசம வீரியச் செறிவிலேயே காணப்படுகிறது. அந்தச்செறிவில் கொடுத்தால் போதுமானது. ஒரு நோயாளி தனக்கு எது நோய் தோன்றுகிறது என்று சொன்னாலும் அதன் அர்த்தம் அவருக்கு ஏதோ ஓர் இயற்கையான செயற்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விட்டது என்பதாகும். இந்த இயற்கையான செயற்பாடு மாற்றமடைவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். சுற்றம் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள், உணவுகளில் வித்தியாசங்கள். கவலை அதிக உடல் உழைப்பு, பயம், திடீ அதிர்சியான செய்திகள், ஏக்கம் இவற்றை போன்ற பல காரணங்கள் இருக்கலா இப்படித் திடீரென ஏற்படும் பாதிப்புக்களை உடன் மருந்து கொடுத்து குணப்படுத்தலாம்.

> ஒரு நோயாளி தனக்கு எது நோய் தோன்றுகிறது என்று சொன்னாலும் அதன் அர்த்தம் அவருக்கு ஏதோ ஓர் இயற்கையான செயற்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விட்டது என்பதாகும்.

இப்படி திடீரென ஏற்பட்ட நோய்கள் தகுந் மருந்துகள் கொடுத்தும் குணமாகாவிடி அதற்கு ஏதோ ஒரு தடைக்காரண இருக்கின்றது என்று அர்த்தமாகும். இவை மூவகை ‘தோசங்கள்’ எனப்படு ஆங்கிலத்தில் “Three Miasmas” எனப்படும்.

தொடரும்



டாக்டர்.
சி.வ. பரராஜசிங்கம், PH.D
வவுனியா, இலங்கை

16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 152

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | | |
| | ■ | ■ | 3 | ■ | 4 | ■ | |
| 5 | | 6 | | | ■ | | 7 |
| | ■ | | 8 | ■ | 9 | ■ | ■ |
| | 10 | ■ | | | | | 11 |
| ■ | | 12 | ■ | ■ | ■ | ■ | |
| | ■ | ■ | | ■ | 13 | 14 | |
| 15 | | | 16 | | ■ | | 17 |

இட - வல

1. தற்போது பிறந்துள்ள தமிழ் புதுவருடம்
2. பூரணை
5. மிகப் பெரியது
7. சிங்கம் (வல-இட)
8. மடியச் செய் (வல-இட)
10. சம்மதி (வல-இட)
11. இந்தியாவில் உள்ள நீர்வீழ்ச்சி(வல-இட)
12. செல்வம் (வல-இட)
13. துணை செய்
15. நடத்தை
17. ஆராதனை (வல-இட)

மேல் - கீழ்

1. வெற்றிலை பாக்கு
3. ஓசை
4. கலப்பை(கீழ்-மேல்)
6. எருது
7. சம்பல் அரைக்க உதவுவது(கீழ்-மேல்)
9. பறவை ஒன்று
10. பழங்களின் உறுதியான மேலுறை
14. மாமிசம்
15. வெளிச்சம் (கீழ் - மேல்)
16. மூங்கில்(கீழ்-மேல்)
17. பூமி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | த் | த | ர | ம் | ■ | டை | ஓ |
| டு | ■ | ரை | | ர | ■ | ■ | ர |
| க் | ■ | ■ | அ | பூ | ர் | வ | ம் |
| கை | து | பா | ■ | ■ | ■ | ■ | ■ |
| ■ | த் | ■ | கு | ண் | ட | ல | ம் |
| று | ம | ■ | த் | ■ | ■ | க | ட |
| ன் | ■ | ஆ | த | ன | ம் | ■ | ண் |
| ஒ | த் | தி | கை | ■ | ■ | பா | கு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் June 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**151இல் வெற்றி பெற்றோர்**

1) R. Lavanya, Mississauga
2) C. Kathirgamanathan , Donmills

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

mhc

# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# திசை மாறிப் போன தமிழ் சினிமா

தமிழ்த் திரையுலகம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. திருவிளையாடல், சரஸ்வதி சபதம் போன்ற படங்கள் மக்களிடம் பக்தி உணர்வை வளர்த்தன. வீரபாண்டிய கட்டப்பொம்மன், ராஜராஜ சோழன் போன்ற படங்கள் தமிழ் உணர்வை ஊட்டின. பாசமலர், முள்ளும் மலரும் போன்ற படங்கள் சகோதர பாசத்தை வளர்த்தன. இந்தப் படங்கள் வெளிவந்து கொண்டிருந்த காலத் திலே கூட சில தரம் குறைந்த வந்த துண்டுதான். அவை எப்போதாவது தான் வரும். வந்த சுவடு தெரியாமலே மறைந்து விடும். ஆனால் இன்று?

வருகிற பத்துப் படங்களில் ஒன்பது படங்கள் முகம் சுளிக்க வைக்கும் ஆபாசக் களஞ்சியமாகவே இருக்கின்றன. சமீபத்தில் நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்த போது ஹோலில் மூன்று நான்கு ரீன் ஏஜ் பிள்ளைகள் சீரியசாக தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். T.V யில்



பிரசித்திபெற்ற வெள்ளைக்கார டான்சர்கள் அநாயசமாக ஆடிக்கொண்டிருந்தார்கள்.

**தமிழ் சினிமாவில் வன்முறையும் ஆபாசமும் கை கோர்த்துக் கொண்டு கூத்தாடுகிறது. கதை, வசனம், பாட்டுக்கள், காட்சி அமைப்புக்கள் எல்லாவற்றிலும் விரசம்.**

விரசம் வழியும் அசைவுகள்.

ஹோலுக்குப்பக்கத்து அறையிலிருந்து அந்தப் பெரியவர், நம் மனதைச் சட்டென்று உணர்ந்து கொண்டு சொன்னார். என்ன பண்றது? அவங்களுக்கு புதிய ரக நடனங்களை என்றால் உயிர். ஆனாலும் இந்த ஆபாசமான நடனங்களைப் பார்க்காதே என்று சொல்ல நம்மூர் சனல்கள் என்ன உருப்படியாவா இருக்கு? T.V ஐ விடக் கேவலமாகவும் ஆபாசமாகவும் தானே நம்மூர் ஹீரோ, ஹீரோயின்கள் ஆடறாங்க. அதனால் தான் இந்த விஷயத்தில் அவங்க இஷ்டத்துக்கு விட்டுவிட்டேன்' என்றார் வேதனையுடன்.

அந்தப் பெரியவரின் வேதனை எவ்வளவு அர்த்தமுள்ளது. ஆழமானது! எப்போதும் இல்லாத அளவுக்கு இன்று தமிழ் சினிமாவில் வன்முறையும் ஆபாசமும் கை கோர்த்துக் கொண்டு கூத்தாடுகிறது. கதை, வசனம், பாட்டுக்கள், காட்சி அமைப்புக்கள் எல்லா வற்றிலும் விரசம். குறிப்பாகப் பாட்டுக்கள். "சின்ன வீடா வரட்டுமா? பெரிய வீடா வரட்டுமா? மேஸ்திரிக்குச் சின்ன வீடு பிடிக்குமா?" என்று ஒற்றன் படத்தில் கவர்ச்சி நாயகி, நாயகினிடம் கண் அடித்துக் கேட்கி றாள். "ஜே ஜே" படத்தில் மே மாதம் தொண்ணூற்றெட்டில் மேஜர் ஆனேனே மேஜர் ஆன நாள் முதலா பேஜார் ஆனேனே' இந்தப் பாடல் கேட்பவர்களை பேஜார் செய்கிறதென்றால் 'சாமி' படத்தின் பாடல் காதுகளில் திராவகத்தையே ஊற்றுகிறது. கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போகலாமா? இல்ல, ஓடிப்போயி கல்யாணம் தான் கட்டிக்கலாமா? என்று ஹீரோ ஹீரோயினிடம் ஆலோசனை கேட்கப் பதிலுக்கு ஹீரோயின் தாலியைத்தான் கட்டிக்கிட்டுப் பெத்துக்கலாமா? இல்ல, புள்ளகுட்டி பெத்துக்கிட்டு கட்டிகலாமா? என்று பதில் ஆலோசனை கேட்கிறாள். பகுத்தறிவு வளர்ந்த மனித சமுதாயத்தில் தான் நாம் இருக்கிறோமோ என்ற சந்தேகமே எழுகிறது.

இப்படி நம் இளசுகளின் மனதை வக்கிரப்படுத்தும் பாடல்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். பழைய பாடல்கள் மட்டும் ஒழுங்கா என்று பதில் கேள்வி கேட்கலாம். நிச்சயம் ஒழுங்குதான். ஜி. ராமநாதனும் கே.வி. மகாதேவனும், எம். எஸ். விஸ்வநாதனும். கண்ணதாசனும், பட்டுக்கோட்டையாரும் கான தர்பார் நடத்திய காலகட்டம் திரையிசையின் பொற்காலமாகவே கருதப்பட்டது. அப்போது எழுதப்பட்ட ஒரு சில பாடல்கள் 'கூந்தல் கறுப்பு, குங்குமம் சிவப்பு' என்கிற மாதிரி அர்த்தமற்றதாக இருக்குமே ஒழிய, ஆபாசக்குப்பையாய் இருக்காது.

பாட்டுக்கள் தான் அப்படி என்றால் இன்றைக்கு எடுக்கப்படும் படத்தின் கதையில் தான் என்ன வாழ்கிறது. தம்பி பெண்டாட்டியை அண்ணன் காதலிப்பதும், அவளை அடைய துடிப்பதும் எப்படிப்பட்ட வக்ர சிந்தனை!. நான்கு இளைஞர்கள் விலைமாதைத் தேடிப்போவதாகக் காட்டியிருக்கும் "பாய்ஸ்" படத்தில் எத்தனை அருவருப்புக்காட்சிகள். 'குத்து' படத்தில் 'நிபுணா நிபுணா' என்று ஒரு பாட்டு. சிம்பு நாயகியைக் கட்டிப்பிடித்து கடற்கறை மணலில் இழுத்து, தண்ணீரில் அமுக்கி, படுக்கையறைக் காட்சிகளைத் தவிர எல்லாம் நடக்கும் அவலம். துள்ளுவதோ இளமை, திருடா திருடி, புதுக்கோட்டையிலிருந்து சரவணன் ஆகிய மூன்று படங்களிலுமே தாராளமாக ஆபாசத்தை அள்ளி விட்டிருக்கிறார்கள். புது வரவான தனுஷ் நாயகியைப் பல காட்சிகளில் தன் நோக்கம் போல் புரட்டி எடுப்பார். புதுக்கோட்டை யிலிருந்து சரவணனில் இளம் நாயகி அபர்ணாவை பல காட்சிகளில் ஏதோ

## சினிமாச் சிதறல்கள்

## பரம்

காமக் கொதிப்போடு அலைவதாகக் காட்டியிருப்பது அநியாயம்.

'வயசுப் பசங்க' என்றொரு படம். பக்திமயமான படங்களை எடுத்த பாரதிகண்ணன். பக்தியும் காமமும் ஒன்று என்ற தியரியில் சிக்கிக் கொண்டாரோ என்னவோ....தெரியவில்லை. படம் முழுக்க ஆபாச மயம்தான். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் 'பண்பு'கள் பற்றி மற்ற இயக்குனர்கள் வக்கிரமாகச் சித்தரித்தார்கள் எனில், அவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டு, பள்ளி மாணவர்களின் படுக்கையறைக்கனவுகளைப் பற்றிப் படம் பிடித்திருக்கும் இந்தப் பொறுப்புள்ள இயக்குனர்கதை என்ன என்கிறீர்களா?

தொடர்ச்சி 10ம் பக்கம்

Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

"நீலம் சில்க்"

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

LARGE INDOOR PUBLIC CAR AUCTION

EVERY WEDNESDAYS EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
- G.M.
- FORD
- CHRYSLER
- HONDA
- NISSAN
- TOYOTA
- V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.




WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com
1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.




# Niru BRAND®

'நிரு' தயாரிப்புக்கள்'

கனடிய சுகாதார விதிகளுக்கமைய

கனடாவில் தயாரிக்கப்படுகின்றன

**No.1**

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

**தரம்**

**No. 1**

**Manufacturers & Distributors of**

*Niru Brand®* Products

**NIRU ENTERPRISES INC.**

76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada

**Tel: 416-750-1976 Fax: 416-750-8779**

E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe

UK. Marketing Office: NIRU ( Europe) LTD.

Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

# மரத்தின்கீழ் மாநாடு - வீடு மனைவி மக்கள் எதிர்காலம்?










ரெலிபோன் அலறி ஓய்ந்தது. பசியில் கதறி அழும் குழந்தை களையில் தூங்குவது போல உலகர் வீட்டில் ரெலிபோனும் அதேபோலத் தான் அடித்து ஓய்ந்து விட்டது. இன்று ஒருவர் ஒரு பேஜர், 2 செல்போன் அப்பிடி இப்பிடி என வைத்திருக்கும் போது உலகர் வீட்டில் உலகர், ராசம்மா, ரூபன், ரூபி அது தவிர ஆட்டிலறி அன்னம்மா, செக்கண்ட் புளோர் செல்லம்மா, பிறிம்லி மீனா, பிறிம்லி மீனாவின் மகன் எல்லோருக்கும் ஒரே ரெலிபோன் தான். ஆனால் பேரனின் செல்போனை இடையிடையே செல்லம்மா தனது மடிக்குள் வைத்துக் கொண்டு வருவது இடையிடைவரும் அழைப்புக்கு யேஸ் நோ சொல்வது சர்வ சாதாரணம். இப்போ வெயில்; அறை எல்லாம் ஒரே புழுக்கம்.

வெளியில் வயது வித்தியாசமற்ற முறையில் மரத்தின் கீழ் மாநாடு நடைபெறுகிறது. யூன், யூலை, ஓகஸ்ட் இந்த தொண்ணூறு நாட்கள் பலருக்கு சூரியனையும் வெளி உலகையும் பார்க்க சந்தர்ப்பம். மீண்டும் பெட்டிபாம்பு போல நாலு சுவருக்குள் அல்லது நிலத்தின் கீழ் பேஸ்மனில் தான் வாழ்க்கை. முதியவர் சிலரின் மரத்தின் கீழ் மாநாடு முடிந்து அடுத்த வருடம் சேரும்பொழுது தான் தெரியும் எந்த முதியவர் வேறு இடம் சென்று விட்டார் அல்லது வேறு உலகம் சென்றுவிட்டார் என்பது. வேலைப்பழுவில் வானொலி கேட்க முடியாத, வார ஆரம்பத்தில் வார நடுப்பகுதியில் வார இறுதியில் வரும் பத்திரிகை பார்க்க முடியாத பலர் நண்பரோ, ழகியவரோ இறந்தது கூட தெரியாத எத்தனைபேர் மரத்தின் கீழ் மாநாடு. ஐக்கியநாடுகள் சபையில் ஈராக் பிரச்சினை அலசலை விட சுவையாக இருந்தது. ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்புளோர் செல்லம்மாவும் அந்தப்பகுதிக்கு புதிதாக வந்தவர்களை R.C.M.P விசாரிப்பது போல விசாரித்து கொண்டிருந்தனர். எத்தனை கோணம் எத்தனை பார்வை என்பது போல எத்தனைபேர் கனடா வந்தபொழுது, உறவினர் வீட்டிலோ ஊரில் தெரிந்தவர் வீட்டிலோ தங்கினால் போதும் உண்டால் போதும் உறங்கினால் போதும் என இருந்து இன்று ஆசையால் வம்பை விலைக்கு வாங்கியவர் எண்ணிக்கை சொல்ல முடியாது. வீடு, மனைவி, மக்கள் குடும்பத்தை காக்க நினைத்த பலர் நேரத்தட்டுபாட்டால் உறவோடு உறவாட முடியாத நிலை மனைவி, பிள்ளைகளை கவனிக்க முடியாததால் விபரீத முடிவுகள்.





தனித்து வாழும் பிள்ளைகளும் தனித்து வாழும் மனைவியும் தனித்து வாழ நிர்ப்பந்திக்கும் கணவனும் வாழ்க்கையின் ஓரத்தை எட்டிப்பார்க்கும் வாழ்வை வெறுத்தவர்களும். அன்னம்மாவும் செல்லம்மாவும் சிறு சம்பாசனையிலேயே எத்தனையோ விடயங்களை கண்டுபிடித்து விட்டனர். சதாம் குசையினைக் கைது செய்து விசாரிக்க முடியாத அமெரிக்க இராணுவம் திணறும்போது மரத்தின் கீழ் மாநாட்டில் அன்னம்மாவும் செல்லம்மாவும், சிரித்து சிரித்து சகல வீட்டு, குடும்பப் பிரச்சினைகளை சல்லடைபோட்டுவிட்டனர். உலகர் எல்லாப் பேப்பரிலும் தனது ராசிபலனை வாசித்து விளம்பரங்களும், உலக செய்தி எல்லாம் படித்துக்கொண்டிருந்தாலும் உலகரைச்சுற்றி இருந்து உலகரின் வயதுக்காரர் இருண்ட முகத்துடன் பிள்ளைகளாலும் மருமக்களாலும், பேரப்பிள்ளைகளாலும் பட்ட, படும் கஸ்டங்களை பரிமாறிக் கொண்டிருந்தனர்.

நகைச்சுவைத் தொடர் 109

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

## திசை மாறிப் போன...

ஏன் இப்படிச் செய்கிறீர்களென்றால் எல்லாம் மாணவர்களைத் திருத்தத்தான் என்கிறார்கள். மனசு கூசாமல் அப்பட்டமான ஆபாசக் காட்சிகளை காண்பித்துவிட்டு விஞ்ஞான பூர்வமான விளக்கப்படம் என்று டைட்டில் போடுகிற அபத்தம் போலத்தான் இதுவும். இந்த இலட்சணத்தில் இதே பாணியில் (விந்தியாவின் இன்னும் தாராளமான கவர்ச்சிக் காட்சிகளுடன் கூடிய) என்னுடைய கலைப்படங்கள் தொடரும் என்று சொல்லியிருக்கிறார் அவர். மாணவர்கள் பாடு குஷி. பெற்றோர்களை நினைத்தால் தான் பாவமாக இருக்கிறது.

'சூப்பர்டா' படத்தின் தயாரிப்பாளர் ஒரு பெண்மணி. அவருக்கே தன் மகளின் மானம் குறித்து எந்த அக்கறையுமில்லை. உடை விஷயத்தில் தாராள மயமாக்கல் கொள்கையை அவிழ்த்து விட்டிருக்கிறது.

இந்தக் கலைச் சேவைகளெல்லாம் போதாதென்று "காதல் அரங்கம்" என்ற பெயரில் இந்தியாவின் முதல் நிர்வாணப்படத்தை எடுக்கிறார் வேலு பிரபாகரன். விழிப்புணர்வு என்ற பெயரில் விழிகளுக்குக் கவர்ச்சி விருந்து படைப்பது தான் அவரது நோக்கம் என்பது படத்தின் போட்டோக்களிலேயே கண்கூடு.

நமது திரையுலகப் பிதாமகர்கள், ரத்தத்தையும், அரிவாளையுமே படம் முழுக்க நிரப்பி வன்முறை வேண்டாம் என்று பிரச்சாரம் செய்வது போல வேலு பிரபாகரன் பாலுறவுக்காட்சிகளை நிறைத்து, காமம் பற்றிய கருத்துப்படம் எடுக்கிறார் என்று நினைத்துக் கொள்ள வேண்டியது தான் வேறு

தொடர்ச்சி 14ம் பக்கம்


## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

Office : 613.823.7555


Cell : 613.866.9931

Toll Free : 1 800 472.6512

## MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*






*LOW - LOW RATES AVAILABLE. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI*

For more information call:

Anil Joshi at

416.888.1072



# கடவுள் பக்திக்கும் நீண்ட ஆயுளுக்கும் தொடர்பு உண்டா?

"ஹலோ!'
'வணக்கம் கவிஞர்.'
'வணக்கம், வணக்கம். வாழ்த்துக்கள்! பிறந்தநாள் வாழ்த்துக்கள்! காலையிலே எடுத்திருந்தேன்.'
'தெரியும். நம்பரைப் பார்த்திட்டுத்தான் எடுக்கிறேன்.'
'எங்கை கோயிலுக்கே போனனீங்கள்?'
'ஓம் ஓம். வேறு எங்கை இந்த வயதிலே போறது?'

'பிறந்த நன்னாளைப் பிறப்பறுக்கும் பிஞ்ஞக ணோடு கொண்டாடுவதுதான் நல்லது. அவனும் உங்களை நல்லாய்த்தான் வைத்திருக்கிறான். இராஜாஜிக்கு எண்பது வயதானபோது எண்பதே ஆண்டான இளைஞனே என்று பாடி-னார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. அந்தமாதிரி நீங்களும் இளைஞனாகவே இருக்கிறியள். வயது தெரியவே இல்லை ஐயா! என்ன காரணம்?'

'உங்களைப் போன்றவர்களின் வாழ்த்துக்களும்

## அறுவை - 20

எனது மனைவியின் சமையலுந்தான்.'

'A man is what he eats' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்குது. அதற்கேற்ப மனைவியின் உணவு உங்களை நீண்டகாலம் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அது சரி, கலியாணம் முடியாதவை என்ன ஐயா செய்யிறது?'

'மனைவியின் உணவுக்கு மற்றொரு பெயர் சுவையான உணவு. கலியாணம் முடியாத வைக்குத் தாய் இருப்பாளே. தாய் தரும் உணவுதானே தலைசிறந்த உணவு. தாயும் இல்லையென்றால் தமக்குப் பிடித்த உணவைத் தாங்களாகச் சமைத்துச் சாப்பிட வேண்டியதுதான். அல்லது கடைகள்தான் இருக்கே! சாப்பாட்டில் சுவையும் இருக்க வேணும் சத்தும் இருக்க வேணும். நல்ல சாப்பாடு என்பதற்காக மூக்குமுட்டப் பிடிக்கக் கூடாது. நான் எப்பொழுதுமே வயிறு முட்டச் சாப்பிடுவதில்லை. என்ன பசியென்றா லும் முக்கால் வயிற்றுக்குமேல் போகக் கூடாது.

'நான் சொன்ன இந்த நல்ல பழக்கங்களையும் ஒழுக்கங்களையும் மனித குலத்தைக் கடைப்பிடிக்க வைக்க எழுந்த நெறிதான் சமயம். இதை விளங்காமல் சமயத்தின் பெயரால் மக்களைக் கொன்று குவித்த சம்பவங்களையும் வரலாறு காட்டுகின்றது.

பசிக்குத்தான் உணவேதவிர வயிற்றுக்கல்ல. வாழத்தான் உண்பது. உண்பதற்கு வாழ்க்கை யல்ல. இனி, உணவு மட்டுந்தான் நீண்ட ஆயுளுக்குக் காரணம் என்றில்லை. மனச் சந்தோசமும் முக்கியம். எதற்கும் கவலைப் படாத மனப்பக்குவம் அவசியம். கவலை பதற்றம் மன அழுத்தம் போன்றவற்றுக்கு வழிவகுக்கும். இவை வேறு வேறு நோய்களை உண்டாக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மூன்றாவதாக நீண்ட ஆயுளுக்கு ஒழுக்கமும் ஒரு காரணம். ஒழுக்கமும் இருவகைப்படும். மனம் சம்பந்தமானது ஒன்று. செயல்வகை மற்றையது. மனத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். கரவு வஞ்சகம் சூது வாது இல்லாத வாழ்க்கை நீண்ட ஆயுளைத் தரும். மனம் சுத்தமாக இருந்தால்



சொல், செயல், நடத்தை எல்லாமே நன்றாக இருக்கும். என்னிடத்தில் தீய பழக்கங்கள் எதுவும் கிடையா. தீய பழக்கங்கள் என்று நான் சொல்வது எனக்கு - எனது உடம்புக்குத் தீமை செய்யும் செயல்களை - புகைத்தல், மது அருந்துதல் போன்ற கெட்ட பழக்கங்களை. அடுத்து மற்றவர்களுடைய மனத்தைப் புண்படுத்துகின்ற சொற்களையோ அவர்களுக்குத் தீமை விளைக்குஞ் செயல்களையோதானும் நான் செய்வதில் ஏன் செய்ய வேண்டும்? இந்த உலகத் நானும் வாழ வேண்டும் மற்றவர்களும் வேண்டும். எல்லோரும் வாழ வேண்டும். எண்ணம் இருப்பதனால் மற்றவர்க வளர்ச்சியைக் கண்டு நான் பொறா படுவதேயில்லை. பொறாமை ஒரு பொல் வியாதி. மேலும் ... .'

'நீங்கள் சமய நடவடிக்கைகளிலும் ஈடு வருகிறீர்கள். கடவுள் பக்திக்கும் நீண்ட ளுக்கும் தொடர்பு இருக்கும்போல் கிறதே!'

'நான் சொன்ன இந்த நல்ல பழக்கங்கை ஒழுக்கங்களையும் மனித குலத்தைக் க பிடிக்க வைக்க எழுந்த நெறிதான் ச இதை விளங்காமல் சமயத்தின் பெய மக்களைக் கொன்று குவித்த சம்பவங்க யும் வரலாறு காட்டுகின்றது. இ காலத்திலும் சமயத்தின் பெயரால் வ வளர்ப்பு நடைபெறுகிறது. என்ன செய்த மனச்சுத்தம் இல்லாத சமயத்தால் ஆ நீடிக்கும் என்று நான் நினைக்கவில்லை!'

'நன்றி ஐயா. வாழ்த்துக்கள்!'
'நன்றி. நன்றி.

பத்து இலட்சம் பொன்னும் கேட்டா
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோது
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!




கவிஞர் வி. கந்தவன


# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

FIREMAN LOFRANCO
PERSONEL INJURY LAWYERS

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின்
உங்கள் முடிவை எடுங்கள்




*IF YOU HAVE OPTIONAL INSURANCE YOU CAN CLAIM
UP TO $1,000.00 IRE
PER W
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்க

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A MOTOR VEHICLE ACCIDEN
• FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY • SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் $172,000.00 வ இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் $172,000.00 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளை பெறமுடியும்.

5255 YONGE ST, SUITE 1300, TORONTO - MISSISSAUGA - KITCHENE

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே அழையுங்கள்

தீபன் - (416) 505-9804
24 Hours Direct Line

# ஆய்த எழுத்து / Uva

90களில் மிகவும் பிரபல்யமான இயக்குனர் மணிரத்தினம். இவரது ஒவ்வொரு படமும் பெரும் எதிர்பார்ப்பை அளிக்கும். 1983இல் பல்லவி அனுபல்லவி என்ற கன்னடம் படத்தின் மூலம் திரையுலக்கு இயக்குனராக அறிமுகமானார். தமிழில் மௌனராகம் இவரை பெருமளவு மக்கள் மனதில் நிறுத்தியது. (இப்படம் மகேந்திரனின் நெஞ்சத்தை கிள்ளாதே என்ற படத்தின் மறுபதிப்பு) இதன் பின்னர் நாயகன் அக்னி நட்சத்திரம், அஞ்சலி, தளபதி, றோஜா, திருடா திருடா, பம்பாய், இருவர், உயிரே, அலைபாயுதே, கன்னத்தில் முத்தமிட்டால் என இவரது படங்களின் வரிசை செல்கிறது.

பொதுஅம்சங்கள்

- மணிரத்தினம் - ஜீவி என்ற பிரபல தொழிலதிபர், தயாரிப்பாளரின் தம்பி, ஒரு MBA பட்டதாரி. இப்பொழுது சுகாசினியின் கணவன். கமலஹாசனின் உறவினர். அடிப்படையில் மேல்தட்டு வர்க்கத்தினர்.
- இவரது பெரும்பாலான படங்கள் வியாபார ரீதியாக வெற்றி பெற்றவை. அதற்கான தளங்கள், கூறுகள், காரணிகள் என்பன பற்றி முழுமையாக அறிந்தவர்.

திரைப்படக் கூறுகள்

அரசியல் படங்கள்

இருவர், பம்பாய், கன்னத்தில் முத்தமிட்டால், நாயகன், உயிரே, ரோஜா போன்றவை.

- தனது நேர்மையற்ற கருத்தைத் துணிந்து கூறுபவர்.
- ஒரு பக்க சார்பு விமர்சனமாகவே இருக்கும்.
- போராளிகளை பயங்கரவாதிகளாகவே பார்ப்பார்.
- சரித்திர, சம்பவரீதியான முறையான ஆய்வுகளின்றி, செய்திகளை மட்டுமே நம்பி திரைக் கதைகளை உருவாக்குபவர்.

காதல், பெதுவான படங்கள்.

- மேலாதிக்க ஆணின் குணாம்சங்களை திணிப்பவர்.
- மேலோட்டமான பார்வையாகவே வெளிப்படும் படைப்புக்கள்.

இவரது சிறப்பம்சங்கள்.

- தமிழில் சினிமா என்ற மொழியை ஓரளவுக்காவது முழுமையாக வெளிப்படுத்திய இயக்குனர்கள் இருவரில் ஒருவர் பாலு மகேந்திரா, மற்றையவர் மணிரத்தினம். ஆங்காங்கே ஒரு சில படங்களை தந்துவிட்டு சென்றவர்களை இங்கு கூறவில்லை. உ+ம் ருத்ரையா. கே. எஸ். சேதுமாதவன் (மறுபக்கம்) போன்றவர்கள்.
- வர்த்தக சினிமாவின் சமரசக்களையும் மீறி ஓரளவுக்காவது இந்த சமரசங்களையும் மீறி திரைப்பட மொழியை நகர்த்துபவர்.

மிகமோசமான கூறுகள்

- பிரமாண்டம் என்ற பெயரில் காட்டப்படும் காட்சிகள்
- வர்த்தக சமரசத்துக்காக காட்டப்படும் மிக மோசமான காட்சிகள் (பாடல் காட்சிகள் உட்பட)

இவரது அரசியல் படங்களில் 'இருவர்' திரைப்பட இயக்க அரசியல் பற்றியது. அதன் கூறுகளை அறைந்து கூறியுள்ளது. அதுவும் தமிழ் நாட்டில் இவ்வாறு கூறுவதற்கு துணிச்சல் வேண்டும். இதில் வரும் பெண் பாத்திரங்களுக்கு நேர் எதிரான பெண் பாத்திரங்களே இவரது மற்றைய படங்களில் பெரியாரின் கருத்துக்களை கொச்சைப்படுத்துவது (பெண்ணடிமை பற்றிய) திராவிட இயக்கங்கள் மாத்திரமல்ல, மணிரத்தினமுமே.

இவ்வாறான அம்சங்களுடன் ஆய்த எழுத்துக்கு செல்வோம். தமிழ், ஹிந்தி மொழிகளில் தயாரிக்கப்பட்டது. தமிழ் பதிப்பு தெலுங்கில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- தமிழில் மாதவன், சூர்யா (தற்பொழுது மிகவும் பிரபல்யமானவர்), சித்தாத், மீரா ஜாஸ்மின், திரெசா, இசாதியோல் (ஹேமமாலினியின் மகள்).

- ஹிந்தியில் அபிசேக் பச்சீன் ( அமிர்தாப்பின் மகன்), விவேக் ஓபராய், அஜித் தேவகான், ராணி முகர்ஜி, இசா தியோல்.
- கதாநாயகன்கள் மூவரும் ஒரு நேர்கோட்டில் சந்திக்கிறார்கள். பின்னர் ஒவ்வொருவரது வாழ்க்கைப் பின்புலம். எதை தொடர்கிறது Amors Perros என்ற மெக்ஸிக்கோ படத்தினதும் மற்றொரு பிரேசில் படத்தினதும் உல்டா. (சென்னைத்தமிழ்) அதாவது தழுவல் என்று விமர்சிக்கப்படுகிறது.

இப்படத்துக்கு ஏன் பெண் பாத்திரங்கள்?

காதல், கவர்ச்சி, etc..etc.. மீரா ஜாஸ்மின் பின்னர் என்னவாகினார். காட்சிகளுடன் ஒன்றி, காதல் செய்து ஆபாசக்காட்சிகளை கூட கவிதையாக காட்டிவிடுவார் மணிரத்தினம். மாதவன் தனது அண்ணை தானே சுட்டுக் கொள்வதற்கு காரணமாக இருந்தவன் யார் என்பதை தெரிந்தும் அவரிடமே தொடர்ந்து

## வானரன்

அடியாளாக இருப்பது ஏன்? சூழலின் காரணமா? அரசியல் நிர்ப்பந்தமா? தெளிவில்லை.

சூர்யா - மாணவன், மாணவர்கள் என்பது இங்கு அடையாளமே. அவர்களது பெயரில் குறி போராளிகள் மீது அவர்கள் தேர்தலில் வென்று பாரளுமன்றம் செல்லவேண்டும். பாராளுமன்ற ஜனநாயகம் மீது அபார நம்பிக்கை, இந்த நம்பிக்கை ஏன் இவரது தளபதி, நாயகன் போன்ற படங்களில் தொலைந்து போனது?

இறுதியாக பாரதிராஜா கூறும் வசனம் "இப்படி வந்தவர்கள் பலர்....." இது திராவிட



இயக்கங்கள் மீதான பாய்ச்சல். அடியான், மாணவன் ஆகியோரது பாத்திரங்கள் வலுவாக அமைக்கப்படவில்லை. அவர்களது பாத்திரங்களின் சமூக வலு, அதன் அடிப்படைக் கூறுகள் நேர்த்தியாக வெளிக்கொணரப்படவில்லை. இவை ஒரு வெறும் உலாவும் பாத்திரங்களே.

ஹிந்தி பதிப்பில் நடித்த அபிஷேக், அநய்தேவகான் ஆகயோர் இயல்பாக நடித்திருந்தனர். சூர்யாவிடம் ஓரளவுக்கு, மாதவன் இடம் அதிகமாகவும் செயற்கை தனம் காணப்பட்டது. பாரதிராஜா இயல்பாக நடித்துள்ளார்.

சாபுசிரில், ரவிகே. சந்திரன் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள். பொதுவாகவே இவரது படங்களில் உள்ள தொழில்நுட்ப சிறப்பை இப்படத்திலும் காணலாம்.

காதல் & கவர்ச்சி & குழப்பம்




MANIKKANDAN


Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு





இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: **Siva: 416-283-1260**

790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7



யோகா சோதிடம்




- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**



இசை வகுப்பு



சங்கீத டிப்ளோமா பட்டம் பெற்று ஆசிரிய சேவையில் பல வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியையினால் வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடந்து கொண்டிருக்கின்றன. புதிய மாணவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். தொடர்புகளுக்கு

திருமதி. த. பரந்தாமன்:

**416-293-3568** MIDLAND / FINCH



வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**







- No Spraying
- No Smelling
- No Moving



YARLCAN STEAM CLEANING

- DUCT CLEANING
- CARPET CLEANING



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள் மோகன்:

Tel:905-887-7436 Cell: 416-721-9709

# தேர்தலினால் கனடிய அரசியலில் திருப்பம் ஏற்படலாம்

இந்த மாதம் அதாவது ஜுன் மாதம் 28ஆம் திகதி கனடாவின் மத்திய அரசாங்கத்திற்கான தேர்தல் நடைபெற இருக்கின்றது. அநேகமான இலங்கைத் தமிழர்களுக்கு கனடிய பிரஜாவுரிமை கிடைத்திருப்பதால், இந்தத் தேர்தலில் அதிகளவு தமிழர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்துள்ளது. எனவே இத்தேர்தல் பற்றிய அடிப்படை விடயங்கள் சிலவற்றைப் பார்ப்போம். முதலில் யார் வாக்களிக்கத் தகுதியானவர்கள் என்று பார்ப்போமேயானால், தேர்தல் தினத்தன்று 18வயது அல்லது அதற்கு மேற்பட்ட கனடா பிரஜாவுரிமை உள்ள அனைவரும் வாக்களிக்க தகுதியானவர்கள். குறிப்பிட்ட ஒரு தொகுதியில் வாக்களிப்பதற்கு அவர்கள் அந்த தொகுதியில் வசித்து வருபவராகவும் அத்தொகுதிக்குரிய வாக்காளர் பட்டியலில் அவர் பெயர் பதியப்பட்டும் இருக்க வேண்டும். இப்படியாக பதியப்பட்டிருக்கும் அனைவருக்கும் இப்போது அவர்களின் முகவரிக்கு வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை கண்டறிந்து இல்லாவிட்டால் தங்களது பெயரை சேர்த்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முதலில் அவர்கள் வசிக்கும் தொகுதியின் பெயரைக் கண்டறிந்து, பின்னர் அத்தொகுதிக்குரிய தேர்தல் அலுவலகம் இருக்கும் முகவரியை அறிந்து கொள்ளவேண்டும். இதை அறிந்து கொள்ள 1-800-463-6868 என்ற இலக்கத்தை அழைத்து, உங்கள் வதிவிட முகவரியை கூறினால், தேர்தல் அலுவலக முகவரியைத் தருவார்கள். இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னராக தேர்தல் அலுவலகத்திற்கு சென்று உங்கள் விபரத்தையும், தேவையான ஆவணங்களையும் கொடுக்கவேண்டும். வாகன சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற உங்கள் பெயர், முகவரி, கையெழுத்து ஆகியன அடங்கிய உத்தியோகபூர்வமான ஆவணம் ஒன்று அல்லது உங்கள் பெயர் முகவரி உள்ள Bill போன்ற ஆவணம் ஒன்றும் அதனுடன் நூல்நிலைய அட்டை (Library Card) போன்ற உங்கள் பெயர் கையெழுத்து உடைய ஆவணம் ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும். பின்னர் அலுவலகம் தரும் பதிவுப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும். இதன்மூலம் உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

யூன் 22க்கு முன்னர் இதைச் செய்யத் தவறினாலும் தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடியிலும் பதிவுசெய்து கொள்ளலாம். இதற்கு நீங்கள் குறிப்பிட்ட ஆவணங்களை எடுத்துச் செல்லவேண்டும். நீங்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிப்பவராகவும், குறிப்பிட்ட நபர் நீங்கள்தான் என சத்தியக் கடதாசியில் கையொப்பமிடவேண்டும். அத்துடன் பதியப்பட்டுள்ள வாக்காளர் ஒருவரும் உங்கள் அத்தாட்சிப்படுத்த வேண்டும். ஆனாலும் தேர்தல் ஆணையாளர் யூன் 22ஆம் திகதிக்கு முன்னதாக பெயரைப் பதிவுசெய்யும்படி கேட்டுக் கொள்கின்றார்.

தேர்தல் தினத்தன்று உங்கள் வாக்காளர் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி இருக்கும் இடத்தில் காலை 9.30 மணியில் இருந்து மாலை 9.30 மணி வரையிலும் உங்கள் வாக்குகளை அளிக்கலாம். தேர்தல் தினத்தன்று வாக்களிக்க வசதியில்லாதவர்கள், அதற்கு முன்னதாக குறிப்பிட்ட சில தினங்களில் Advance Voting என்ற முன்கூட்டிய தேர்தல் வாக்களிப்பு மூலம் இதற்கென வேறாக அமைக்கப்பட்டுள்ள இடங்களில் வாக்களிக்கலாம். அநேகமான தொகுதிகளில் யூன் 18, 19, 21 ஆம் திகதிகளில் மதியம் 12:00 மணியிலிருந்து மாலை 8:00 மணிவரை முன்கூட்டியே நடைபெறும். வாக்களிப்பு இடம்பெறும். இதற்கான இடமும் வாக்காளர் அட்டையில் குறிக்கப்பட்டிருக்கும்.

மேற்கூறப்பட்ட தினங்களில் வாக்களிக்க முடியாதவர்கள் தபால் மூலமாகவும் வாக்களிக்கலாம். இதற்காக அவர்கள் 1-800-463-6868 என்ற இலக்கத்தை அழைத்து, நேரடியாக வாக்களிக்க முடியாத காரணங்களைக் கூறுமிடத்து அவர்களுக்கு தபால்மூலம் விண்ணப்பப்பத்திரமும் மற்றும் விபர ஆவணங்களும் அனுப்பப்படும். அதை அவர்கள் நிரப்பி தேர்தல் தினத்திற்கு முன்பாக திருப்பி அனுப்பவேண்டும்.

கடந்த தேர்தலின்போது மொத்தம் 301 தொகுதிகள் இருந்தன. இவற்றினூடாக 301 பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இவ்வருட தேர்தலில் சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக மொத்த தொகுதிகள் 301 இலிருந்து 308ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த பாரளுமன்றம் கலைக்கப்பட்டபோது 5 கட்சிகள் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்டிருந்து.

கடந்த தேர்தலில் லிபரல் கட்சி 172 ஆசனங்களையும், கனேடியன் அலையன்ஸ் கட்சி 66 ஆசனங்களையும், புளொக் கியூபெக்குவா 38 ஆசனங்களையும் NDP 13 ஆசனங்களையும், கொன்ஸவேர்டிவ் கட்சி 12 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

**கடந்த தேர்தலைப் போலல்லாது, இம்முறைத் தேர்தலில் புளொக் கியூபெக்குவா கட்சியைத் தவிர மற்றைய கட்சிகளின் தலைவர்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. லிபரல் கட்சியின் தலைவராக போல் மார்ட்டினும், NDP யின் கட்சியின் தலைவராக ஜக் லேட்டனும் தெரிவு செய்யபட்டுள்ளார்கள்.**

கடந்த தேர்தலைப் போலல்லாது, இம்முறைத் தேர்தலில் புளொக் கியூபெக்குவா கட்சியைத் தவிர மற்றைய கட்சிகளின் தலைவர்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. லிபரல் கட்சியின் தலைவராக போல் மார்ட்டினும், NDP யின் கட்சியின் தலைவராக ஜக் லேட்டனும் தெரிவு செய்யபட்டுள்ளார்கள். கனேடியன் அலையன்ஸ் கட்சியும், கொன்சவேர்டிவ் கட்சியும் இணைந்து புதிய கட்சியாக "New Conservative" என்ற கட்சியை ஆரம்பித்துள்ளார்கள். இதன் தலைவராக முன்னைய கனேடியன் அலையன்ஸ் கட்சியின் தலைவரான ஸ்டீபன் ஹாப்பர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த நான்கு கட்சிகளின் தலைவர்களுள் ஒருவர் அடுத்த பிரதமராகும் வாய்ப்பைப் பெறுகின்றார். எனவே இந்த தலைவர்கள் பற்றிப் பார்ப்போம்.

லிபரல் கட்சியின் தலைவரான போல் மார்ட்டின் ஒன்டாரியோவிலுள்ள வின்சர் நகரில் 1938 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் திகதி பிறந்தவர். ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் உளவியல், சரித்திரம் ஆகிய துறைகளில் BA பட்டமும், பின்னர் சட்டவல்லுனராக பட்டமும் பெற்றவர். ஆரம்பத்தில் வழக்கறிஞர் ஆக கடமையாற்றி, பின்னர் Power Corporation of Canada வில் ஒரு நிறைவேற்று அதிகாரியாகவும், பின்னர் பல மில்லியன் டொலர்கள் பெறுமதி வாய்ந்த Canada Steam Ship Lines என்ற கப்பல் நிறுவனத்தில் தலைவராகவும், பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் இருந்துள்ளார். இவரின் தகப்பனார் லிபரல் கட்சியின் அங்கத்தவராக நான்கு பிரதம மந்திரிகளின் கீழ் அமைச்சராக கடமையாற்றியவர். போல்



## விஜே குலத்துங்கம்

மாட்டின் முதன்முறையாக 1988ஆம் ஆண்டு மொன்றியோலிலுள்ள Lasalle -Emard தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவரானார். 1990 ஆண்டு லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு, ஜோன் கிறெச்சியான் வெற்றிபெற, போல் மார்ட்டின் இரண்டாவதாக வந்தார். 1993 இல் லிபரல் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து 2002ஆம் ஆண்டுவரை நிதியமைச்சராக கடமையாற்றினார். 1993 இல் லிபரல் கட்சி அரசாங்கத்தை அமைத்தபோது, அதற்கு முன்னர் இருந்த கொன்சவேர்டிவ் கட்சியினர் 40பில்லியன் டொலர் நிதி பற்றாக்குறையை விட்டுச் சென்றார்கள். இதனைச் சரி செய்து தொடர்ந்து 6தடவை மிதமிஞ்சிய (Surplus) நிதியுடனான சமப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து கனடிய நாட்டின் நிதி நிலைமையை வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றை விட நல்ல நிலைக்குக் கொண்டு வந்த பெருமை இவரைச் சாரும். 2002இல் அமைச்சரவையை விட்டு விலகிய இவர், 2003ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 90வீதமான ஆதரவிற்கு மேலாகப் பெற்று, லிபரல் கட்சியின் தலைவரானார்.

புதிய கொன்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவரான ஸீடிபன் ஹார்பர் 1959 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம்திகதி ரொறொன்ரோவில் பிறந்தவர். 1985ஆம் ஆண்டு கல்கரி பல்கலைக்கழக்த்தில் BA பட்டமும் பின்னர் 1991ஆம் ஆண்டு MA பட்டத்தையும் பெற்றார். ஆரம்பத்தில் பொருளியல் நிபுணராக கடமையாற்றினார். 1993ஆம் ஆண்டு தொடக்கம் 1997 ஆம் ஆண்டு வரையிலும் கல்கரி மேற்கு தொகுதியில் Reform கட்சி பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தார். 1997ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடவில்லை. 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் கனேடியன் அலையன்ஸ் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 2002ஆம் ஆண்டு மே மாதம் கல்கரி தெற்கு தொகுதி பாராளுமன்ற அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார். 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொன்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவரான பீற்றர் மக்கேயுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இரண்டு கட்சிகளையும் இணைத்து புதிய கொன்சவேர்ட்டிவ் கட்சியை உருவாக்கினார். ஜனவரி 2004 ஆம் ஆண்டு புதிய கொன்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அரசியலில் பாராளுமன்ற அங்கத்தவராகவும், எதிர்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். ஆனால் மந்திரியாக இருந்து ஆட்சியில் இருந்த அநுபவம் இவருக்கில்லை.

NDP கட்சியின் தலைவர் ஜக்லேட்டன் மொன்றியோலில் 1950ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் திகதி பிறந்து, பின்னர் கியூபெக் மாகாணத்திலுள்ள ஹட்சன் நகரில் வளர்ந்தவர். மொன்றியோல் மக்கில் (McGill) பல்கலைக்கழகத்தில் BA பட்டத்தைப்பெற்று, பின்னர் யோர்க் பல்கலைக்கழகத்தில் MA பட்டத்தையும், Ph.D கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். றையர்சன் பல்கலைக்கழக்தில் பேராசிரியராக கடமையாற்றியவர். Green Catalyst Group Inc என்ற நிறுவனத்தை ஆரம்பித்தவர். 1982இல் இருந்து 91வரையிலும் City of Toronto கவுன்சிலராக கடமையாற்றியவர். 1990 இல் பதில் மேயராக கடமையாற்றினார். 1994இல் இருந்து 1997 வரையிலும் Toronto Metro Councilor ஆகவும், 1997இல் இருந்து இன்றுவரை City of Toronto கவுன்சிலராக உள்ளார். 2001ஆம் ஆண்டு Federation of Canadian Municipality எனப்படும். கனடா முழுவதற்குமான நகரசபைகளின் ஒன்றிணைந்த அமைப்பிற்கு தலைவராக இருந்தவர். மாகாண பாராளுமன்றத்திலோ மத்திய அரசாங்கத்திலோ கடமையாற்றாத இவர் முதன் முறையாக மத்திய அரசாங்க பாராளுமன்ற தேர்தலில் ரொறொன்ரோ - டான்போர்த் தொகுதியில் போட்டியிடுகின்றார்.

புளொக் குபெக்குவா கட்சியின் தலைவரான கில்லிஸ் டுசெப்பே மொன்றியோலில் ஜுலை மாதம் 22ஆம் திகதி பிறந்தார். மொன்றியோல் பல்கலைக்கழகத்தில் படித்து மொன்ற் செயின்ட் லூயி கல்லூரியில் BA பட்டம் பெற்றார். தொழிற்சங்க அமைப்பாளராக கடமையாற்றிய இவர் 1990 ஆம் ஆண்டு முதன்முறையாக பாராளுமன்றதிற்கு தெரிவானார். 1996ஆம் ஆண்டு எதிர்கட்சியின் மன்றத் தலைவரானார். பின்னர் அதேயாண்டு உதவி எதிர்க்கட்சித்தலைவராகவும், 1997இல் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு எதிர்க்கட்சித் தலைவரானார்.

கட்சியின் கொள்கைகள் தேர்தல் காலங்களில் அடிக்கடி மாறி வந்தாலும் அடிப்படையில் புதிய கொன்சவேர்டிவ் கட்சியின் தீவிர வலதுசாரிப் போக்குக் கொண்டவர்களாகவும், NDP கட்சி இடதுசாரிக் கொள்கையுடையவர்களாகவும், லிபரல் கட்சி இரண்டுக்கும் இடைப்பட்டதான



கொள்கையுடைதாகவும் உள்ளன. புளொக் குபெக்குவா ஒரு பிரதேசவாரிக் கட்சியாக, கியூபெக் மாகாணத்தின் நலன்களில் மாத்திரம் அக்கறை கொண்டதாக உள்ளது.

# உலகமயமாதலின் சில கூறுகள்

உலகமயமாதல் என்ற பெயர் உண்மையில் வணிக அல்லது வர்த்தக உலகமயமாதல் என்றே சொல்லப்படவேண்டும். (Corporate globalization). இதனை நிர்வகிக்கும். அனுசரணையாக்கும் நிறுவனங்கள் WTO - WORLD TRADE ORGANIZATION
IMF - INTERNATIONAL MONETARY FUND
WORLD BAND போன்றவை.

## - பதமி -

Immigration குடிவரவு, குடியகல்வு
அமெரிக்க போன்ற மேற்கத்திய நாடுகளுக்கு குடி பெயர்வதற்கு நீண்ட சட்டதிட்டங்கள் உண்டு. மிகவும் கடினம். ஆனால் அமெரிக்கர்கள், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மிகவும் சுலபமாக சென்று தங்கலாம். இதுவும் இந்த வர்த்தக உலகமயமாதலின் ஒரு கூற்றே. வர்த்தக நிறுவனங்களும், வர்த்தகங்களும் குடிபுகுவதற்கு ஏதுவாக பல மாற்றங்கள் வளர்முக நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. இந்த நிறுவனங்களுக்கான பாதுக்காப்பு அதிகரிப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் பாதுகாப்புக்கான செலவை அதிகரிக்கிறது. கடுமையான சட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன.
2. தொழிலாளர்களுக்கான உரிமைச் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன.

> Nike பிரபல்யமான சப்பாத்து. ஆனால் இந்நிறுவனம் சப்பாத்துக்களை உற்பத்தி செய்வதில்லை. 50க்கு மேற்பட்ட நாடுகளில் 700க்கு அதிகமான தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் சப்பாத்துக்களை தங்களது பெயரில் சந்தைப்படுத்துகின்றது.

3. பொருளாதார மாற்றங்களுக்கும், மக்கள் உரிமைகளுக்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்றவற்றுக்காக போராடுபவர்களுக்கு எதிராக சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
4. இவர்களின் (மேல் நாட்டு வர்த்தக) வருகைகான செலவு, உள்நாட்டு சமூக சேவை, உற்பத்தி போன்றவற்றிக்கு அரசு செலவு செய்யும் வீதத்தை குறைக்கிறது.
5. உள்நாட்டு வளங்கள், மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.
6. நாணய வலு குறைக்கப்படுகிறது.
7. பாரம்பரிய வர்த்தக முறைகளுக்கு மாறாக புதிய வர்த்தக முறைகள் அமுல்படுத்தப்படுகின்றன. இவை பற்றிய போதிய அறிவின்மை பலரை கடனாளியாக்கி விடுகிறது. உதாரணம் பங்குச் சந்தை, Credit card.
8. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதீத வரிச்சலுகை வழங்கப்படுகிறது.
9. முதலீட்டுக்கான கடன் வசதியை, தேசிய வங்கிகள் மூலம் கொடுப்பது. இவர்கள் வங்குரோத்து நிலை அடைந்தால், இதனை மீட்க முடியாது. தேசிய வங்கிகள் வங்குரோத்து நிலைக்குச் செல்கிறது.
10. கலாசார மாற்றங்கள், வாழ்க்கை முறை மாற்றங்கள்.
11. Uniform Standards Products and Licensing. இதன் மூலம் இலகுவாக மேற்கத்தைய நிறுவனங்கள் வளர்முகநாடுகளில் தங்களை இருத்திக்கொள்கின்றன.
12. தேசிய மொழி அல்லது உலகமொழி. வர்த்தக மொழியாக ஆதிக்கம் பெறும் மொழி மற்றைய மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவற்றின் அழிவிற்கு வழிகோலும்.
13. மேற்கத்தைய முகாமைத்துவ, கல்விப் பட்டங்களுக்காக அங்கீகாரம். ஒரு CPA, அல்லது ஒரு அமெரிக்க பட்டதாரி இலகுவாக இந்தியா போன்ற நாடுகளில் வேலை செய்யலாம். அறிக்கைகளுக்கு கையொப்பமிடலாம். ஆனால் அங்கு பட்டம் பெற்றவர்கள் இங்கு?
14. தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஒடுக்கப்படுகின்றன.

இவற்றிற்கு உதாரணமாக Nike பிரபல்யமான சப்பாத்து. ஆனால் இந்நிறுவனம் சப்பாத்துக்களை உற்பத்தி செய்வதில்லை. 50க்கு மேற்பட்ட நாடுகளில் 700க்கு அதிகமான தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் சப்பாத்துக்களை தங்களது பெயரில் சந்தைப்படுத்துகின்றது. இதே தொழிற்சாலைகளில் மாதம் 17டொலருக்கு வேலை செய்யும் தொழிலாளி உற்பத்தி செய்யும் ஒரு சப்பாத்தின் விலை 100 டொலராகவிருக்கும். இந்தோனேசியா போன்ற நாடுகள் இதற்கு உதாரணம்.

அடுத்த இதழில் உலகமயமாதலில் கலாசார மாற்றங்கள்.

## திசை மாறிப் போன...

வழியில்லை.

இன்றைய பல டைரக்டர்கள் ஹீரோயின் என்பவள் முடிந்தவரை கவர்ச்சி காட்டினால் போதும். அது தவிர நடிப்பு என்று அவருக்கு எதுவும் கிடையாது என்ற நிலையிலேயே காட்சிகள் அமைக்கிறார்கள்.

நடிகையர்திலகமும், நாட்டியப்பேரொளியும் ஜொலித்த இதே தமிழ் சினிமாவில் தான் இந்த அவலங்களும். எதற்கெதற்கோ போராடும் நமது மாதர் சங்கங்கள் இதற்காகவும் போராடலாமே. அவர்களிடம் தமிழ் சினிமா இன்று ஏன் இப்படி திசைமாறிப் போய்விட்டது என்று கேட்டால் என்ன பதில் வரும் தெரியுமா?

'மக்களின் ரசனைக்கு ஏற்றபடிதான் நாங்கள் தீனி போடுகிறோம்' என்று நூற்றாண்டு காலமாகப் பாடிவருகிற சரணத்தையே பொறுப்பில்லாமல் பாடுவார்கள்.

ஒரு துள்ளுவதோ இளமை ஹிட்டானால், அதனைத் தொடர்ந்து அப்படிப்பட்ட ஆரோக்கியமான முயற்சிகள் ஏன் எடுக்கப்படுவதில்லை.
சமீபத்தில் கூட பிதாமகன், காதல் கொண்டேன், ஆட்டோகிராப் போன்ற நல்ல படங்கள் வந்தன. அனைத்துமே பிரமாதமான வெற்றியைப் பெற்றன. நல்ல தரமான, வித்தியாசமான கதைஅம்சம் உள்ள படங்கள் எனில் அவற்றை மிகப்பெரிய வெற்றிப்படங்களாக்க நாங்கள் தயார் என்கின்ற உறுதியான செய்தியை மக்கள் இதன் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். அதேசமயம் 'பாய்ஸ்' போன்ற ஆபாசப்படங்களுக்கு மக்கள் பேரடி கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் தரமானது எது, தரம் குறைந்தது எது நல்ல படம் எது என்று பிரித்துப்பார்க்கிற பக்குவம் அவர்களுக்கிருக்கிறது. அந்தப் பக்குவத்தை உணர்ந்து கொண்ட படைப்பாளிகள் தமிழ்சினிமாவில் இன்றைக்கு மிகக்குறைவு. அந்த எண்ணிக்கை கூடும் போது தான் தமிழ் சினிமாவுக்கு சரியான திசை புலப்படும்.


SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL





A-Z Special Deal
• 55 Lessons in Truck
• 55 Lessons in Class
• Unlimited Road tests
• Free Air brake Training
• Free Log book Training
Only $899

• Qualified, experienced Instructors
• Flexible Timing
• Up grating your License
• Job Placement Right Away!

Fork Lift licence only $99.00 Air brake class

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
Tel: 416-525-7958
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

SAFETY TRUCKS
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z




In Classes
• 365 (Learning Permit)
• Log Books
• Air Brake (Z)
• Dangerous Goods
• Border Crossing
• Defensive Driving Course

• தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
• One On One Training
• அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
• கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (10 ஆம் ஆண்டு)
• We Accept Welfare & Unemployment Insurance
• வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

17 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
250 Summerlea Road, Brampton, ON

# மனம் போல வாழ்வு

ஓர் உறவிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய சகலதையும், நீ கற்றுக்கொண்டவுடன், அதன் காலம் முடிவடைந்து விடும். உனது எந்தக் காயத்தைக் குணப்படுத்த இந்த உறவிற்குள் வந்தாயோ, அது குணமடைந்ததும், அதற்குக் காரணமான அந்த உறவு முடிவடைந்து விடும். முடிவடைந்த உறவு முடிந்தது தான். அதைப் புதுப்பிக்கச் செய்யப்படும் முயற்சிகளெல்லாம் எதிர்காலத்தை கடினமானதாக்க உன்னைப் பாதிக்கும். இது உலக நியதி.

ஓர் உறவை முடிவிற்குக் கொண்டுவருவது மிகவும் கஷ்டமான சவால். ஓர் அவசியமில்லா அநுபவம். உறவுமுறிவைச் சீர் செய்வது தான் சரி என்று நீ இன்றுவரை நம்பியிருக்கலாம். எமது தமிழ்ச் சமுதாயத்தில் குடும்ப முறிவுகளைச் சீர் செய்து மீண்டும் ஒட்ட வைப்பது தான் சரி என்று நாம் பிரம்மப் பிரயத்தனம் செய்கிறோம். இதன் விளைவாக புளியம்பழமும் ஓடும் போல முகமூடிகளுடன் வாழும் தம்பதிகள் புலம்பெயர்ந்த எம்மவர்களுள் பலர் இருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. விவாகரத்து எனும் உறவுமுறிவு எம்மவர்களால் முற்றாக அங்கீகரிக்கப்படாத ஒன்றாகவே இன்னும் இருக்கின்றது. தாம்பத்யப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தமிழர்கள் உளவளத்துணையை நாடுவதும் இல்லை என்பதும் வேதனைக்குரிய விஷயம். குடும்பப் பிரச்சினையின் ஆரம்பத்தில் உளவளத்துணை நிச்சயம் உறவு முறிவைத் தவிர்க்க உதவும் என்பது எனது அநுபவத்தில் நான் கண்டறிந்த உண்மை என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஆகவே பிரச்சினைத் தீர்விற்கு உளவளத்துணை அத்தியாவசியம். ஆனாலும் ஒருவரை ஒருவர் வெறுக்கும் தம்பதிகள் சமூகத்திற்காக வேஷம் போட்டு ஒருமித்து வாழ்வதை விட பிரிந்து தத்தம் வழி போகும் நாள் சீக்கிரம் எம்மத்தியில் வரத்தான் போகின்றது. ஆகவே உறவு முறிவினால்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

கற்றுக்கொண்டது, குணமடைந்தது, யாவற்றையும் அங்கீகரித்து இன்று நீ ஏற்றுக்கொள். இவற்றிற்காக நன்றி கூறும்போது உறவை விட்டுப்பிரிவது உனக்குச் சுலபமாயிருக்கும். நான் படிக்க வேண்டிய பாடங்களைப் படித்து, பெற வேண்டிய ஆசீர்வாதங்களைப் பெற்று குணப்படுத்த வேண்டிய காயங்களைக் குணப்படுத்தி, வாழ்வை இன்று உள்ளபடியே விசுவாசத்துடன் அங்கீகரிக்கின்றேன்.

எனது சிந்தனைகளையோ, எனது உணர்வுகளையோ, நான் உண்மையில் யார் என்பதையோ, மற்றவர்களிடமிருந்து மறைக்க முடியாது என்பதை நான் உணர்ந்ததும், அன்பின் தன்மையை நான் புரிந்து கொள்வேன்.

**எமது தமிழ் சமுதாயத்தில் குடும்ப முறிவுகளைச் சீர் செய்து மீண்டும் ஒட்ட வைப்பது தான் சரி என்று நாம் பிரம்மப் பிரயத்தனம் செய்கிறோம்.**

சிற்சில நேரங்களில் மட்டும் மகிழ்ச்சியாகவும் மிகுதி நேரமெல்லாம் துக்கத்துடனும், மற்றவர் உன்னை விட்டுப்பிரிந்து போய்விடப் போவதாக நீ பயப்பட்டால், நீ பிரிய விரும்பனாலும் அதற்கு முதல் அந்த உறவு தானாகவே உன்னை விட்டுப் பிரிந்து போய் விடுமோ என்ற அச்சத்துடன் காலத்தைக் கடத்தினால், அன்பு நிறைந்த வாழ்விற்கு உன்னைப் பூரணமாக நீ அர்ப்பணிக்கவில்லை என்று தான் அர்த்தம். நான் எதற்காக இன்னும் இந்த உறவிற்குள் கட்டுப்பட்டிருக்கிறேன்? நானும் காயமடையாமல், மற்றவரையும் காயப்படுத்தாமல் எப்படிப் பிரியலாம், என்ற எண்ணத்துடன் நீ வாழ்ந்து கொண்டிருந்தால், வாழ்வில் அன்பிற்கு முதலிடத்தை நீ கொடுக்கவில்லை என்பதைப் புரித்து கொள். உனக்கு வேண்டியவற்றை, உனது தேவைகளை, நீ உண்மையில் எப்படிப்பட்டவன் என்பதைப் பயமின்றி வெளிப்படுத்தாவிடில், நீ அன்பிற்குள் கட்டுப்படவில்லை என்பதைத் தெரிந்து கொள். மேற்கண்ட மாதிரி சந்தர்ப் பங்களுள் நீ அகப்பட்டிருந்தால் உண்மையில் நீ அன்புடன் வாழவில்லை. அன்பிடமிருந்து ஓடி ஒளித்திருக்கிறாய் என்பதைப் புரிந்து கொள்.



சத்தியத்தின் வடிவமான அன்பு ஒருவரையும் ஒருபோதும் முகமூடியின் பின் ஒளிந்து வாழச் சொல்வதில்லை. நிபந்தனையில்லாத அன்பைக் கொடுத்தும், பெற்றுக்கொண்டும் வாழும் போது நீ பெருமிதத்துடன் உயர்ந்து நிற்பாய். உனக்குப்பிடித்த சிலசமயங்களில் மட்டும் அரைவாசிக் கதையைச் சொல்லி வாழ்வதல்ல அன்பு. தனது உணர்வுகளையும் நேரத்தையும் கட்டுப்படுத்த தனது கதையை அன்பு ஒரு போதும் சொல்லாமல் விடாது. மரியாதை, மேன்மை, கீர்த்தி, சத்தியம் நிரம்பியது அன்பு. மென்மையான சுபாவம் கொண்ட அன்பு இரக்கத்துடன் உணர்வுகளைப் பகிர்ந்து, துன்புற்றோருக்கு ஆறுதல் அளிக்கும் தன்மை நிறைந்தது. மென்மையாகவும் அதேசமயம் துணிவுடனும் குரல் கொடுக்க வல்லது அன்பு. தன்னை இழக்காது அதிக தூரம் செல்லும் சக்தி கொண்டது அன்பு. ஒரு பிரச்சினைப் புயலுக்கு மத்தியில் ஒரு புன்னகையை
வாய்விட்ட சிரிப்பை ஏற்படுத்தக
ஏதாவது ஒன்று அந்த உறவில் அகப்ப
அங்கு அன்பு இருக்கின்றது என்பது அ

ஒரு பிரச்சினைக்குக் காரணம் மற்ற
விட்ட பிழை தான். தான் ஒரு
புரியவில்லை என்ற பிழையான நம்பி
டன் குற்றத்தைப் பிறர் மேல் சுமத்துவது
மக்களுக்குக் கைவந்த
பிரியமானவர்களே! சகல உறவுகளிலு
முக்கியமானது, நீங்கள் உங்கள
இறைவனுடனும் உருவாக்கிக் கொ
உறவு தான். முதலில் நீங்கள் உங்க
மதித்து நேசிக்க வேண்டும். அதற்கு
நல்லவராக உண்மையானவராக,
தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை
மனித மேம்பாடுகளுடன் வாழ வேண்டு

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617

லலிதா புரூடி



SRI PARADISE Catering & Take -ou

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

திங்கள் - செவ்வாய்
கொத்துரொட்டி
ஆடு or மாடு or கோழி
$2.99

புதன் - வியாழன்
புட்டு Combo- குழல் பிட்டு, மாசிச்சம்பல், நெத்தலி, உருளைக்கிழங்கு குழம்பு
$2.99

வெள்ளி ரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை
$4.50

வெள்ளி
inner Special
மசாலா தோசை, சாம்பாறு, சம்பல்
$2.99

Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ், தண்டூரி சிக்கன
$3.99



பரடைசின் Special
புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad
$2.99

Daily speciall
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்பமம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு
$2.99

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு or மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, மீன் பொரியல், கட்டைச்சம்பல், கட்லட், உருளைக்கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
$5.99

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்


உயர்வான பாதையில் திட்டமிடுங்கள்
FRAGILE
Restaurant For Sale
Very good
Downtown Location
Asking price $200, 000
$140,900
DonMills/Overlea
Condo Apt
3 Bedrooms
2 Washrooms
$214,900
McCowan/Finch
Condo- Townhouse 2 Storey, 3 Bedrooms, 2 Washrooms,
$239,900
McLevin/Morningside
Link 2-Storey House
3 Bedrooms
3 Washrooms
SOLD
Highglen/Middlefield
2 Storey Detached
4 + 2 Bedrooms
5 Washrooms
$264,900
Drittcurrent/Kennedy
Att/Row/Townhouse - 2Story
3 Bedrooms
3 Washrooms
$279,900
Morningside/Oldfinch
Detached, 3 Bedrooms, 3 Washrooms, Beautiful House in Convenient Locaton, Close to Schools, TTC and all ameneties. New Carpet throughout
$344,900
05/28/2004
Morningside/finch
Detached 2 Store
4+2 Bedrooms,
4 Washrooms
$329,900
Brimley/Eglinton
Detached Banalow
3+2 Bedrooms, 2 Washrooms
Many Upgrades, New Windows, New roof, New Facing Stone, New Driveway
$449,900
Highglen/Middlefield
Detached 2 Storey
4+2 Bedrooms
5 Washrooms
$369,900
Neilson/Finch
New Home, Detached
4 Bedroom, 2,300 sf
$245,000
Neilson/Sheppard
Semi- Detached
3 + 2 Bedrooms
3 Washrooms
$479,900
Price Reduced
Steels/Markham
Detached 2-Storey House
4 Bedrooms, 3 Washrooms
digi Media Creations -416.467.4952
Condo For Rent
3 Bedroom
Neilson & McLevin
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3
சசி செல்வரட்ணம்
Sales Rep.
Direct 416.725.1125
Office 416.321.6969



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers to Tutorial 147 — June 01, 04

**Ans. 1.** 0 2,2,2, 22 The number of binary sequence of length that begins with zero is $2^5$. Length 7 will be $2^6$ and 8 will be $2^7$.
$\therefore$ The sum is $2^5 + 2^6 + 2^7 = 224$.

**Ans. 2.** Sequence of length 6 using the digits and 26 letters. If the letter is in the final position, there will be 26.10.9.8.7.6 pass words. The number of pass words will be the same if the letter is in $2^{nd}$ $3^{rd}$ $4^{th}$ of $5^{th}$ or 6th position, $\therefore$ Number of pass words is 26.10.9.8.7.6.6 = 4717440

**Ans. 3** 0 Number of subsets is $({}^{49}{}_{6})$ (h) If 49 is included then $({}^{48}{}_{5})$ subsets.

